

# ஞானச்சுடர்

சித்திரை

மலர் 2007




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

# குறள்வழி

*இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை யுடைமை*
*மயலாகும் மற்றும் பெயர்த்து.*

பொருள்: ஒரு பொருளுமில்லாதிருக்கையே தவஞ் செய்வார்க்கு வேண்டப்படுவது பொருள் உடைமை தவத்தைப் போக்குதலால் மீண்டும் மயங்குதற்கு ஏதுவாகும். (344)



## நற்சிந்தனை

### திருவம்மானை - 2

அங்குமிங்கு மாக வலைந்து திரிவேனைத்
தங்குங் கருணையினாற் றானாண்டு கொண்டான்
எங்கள் குருநாதன் எழிலார் திருவடியை
இங்குநாம் பாடியின்புறுவோ மம்மானாய் 1

ஆறுமறி யாம லந்தரங்க மாயருளைச்
சேரும் படிசெய்த செல்வக் குருநாதன்
ஊரும்பே ருமறியா வொருவன் கழல்பாடி
நீரும்பூவுங் கொண்டுநிதம் போற்றுதுங்கா ணம்மானாய் 2

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 112

## 2007 சித்திரை

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கணபதி | கார்த்திகா சரவணபவன் | 1 - 4 |
| சேரவாரும் செகத்தீரே | இராசையா ஸ்ரீதரன் | 5 - 7 |
| வாரியார் சுவாமிகள்..... | வல்வையூர் அப்பாண்ணா | 8 -10 |
| பூவுலகத்தின் கற்பகதருவாம்...... | ப. அருந்தவம் | 11 -14 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவமகாலிங்கம் | 15 - 19 |
| சங்கம வழிபாடு | இ. சாந்தகுமார் | 20 - 21 |
| முன்னோர் சொன்ன கதைகள் | சி. யோகேஸ்வரி | 22 - 23 |
| ஓத உலவா ஒரு தோழன் | துணைவியூர் கேசவன் | 24 - 27 |
| கருணை | க. சிவசங்கரநாதன் | 28 - 29 |
| ஆனந்த நிலையம் | இரா. செல்வவடிவேல் | 30 - 33 |
| திண்ணமாகத் திறந்தருள்....... | ஆர். வீ. கந்தசாமி J.P | 34 - 36 |
| நித்திய அன்னப்பணி | | - 37 |
| அறுபத்துமூவர் குருபூசையில்.... | அன்னைதாசன் | 38 - 40 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 41 - 44 |


அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா

வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்:- 021- 2263406

பதிவு இல. Q.D./44/NEWS/2007

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

உ

# ஞானச்சுடர்

# பங்குனிமாத வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஞானச்சுடர் சஞ்சிகையின் 111ஆவது மலர் 27.04.2007 வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் பேரவைத் தலைவர் திரு க. அருள்லிங்கம் தலைமையில் வெளியீடு செய்யப்பட்டது.

**வெளியீட்டுரை:-**

வெளியீட்டுரையை நிகழ்த்திய செஞ்சொற்செல்வர் இரா. கேதீசன் அவர்கள் ஞானச்சுடர்ச் சஞ்சிகையானது இக்கட்டான சூழ்நிலையிலும் இடையறாது வெளிவருவது சந்நிதி வேலவனின் திருக்குறிப்பினாலேயே என்பது யாவரும் இங்கு ஆர்ந்துணர்ந்த உண்மை என்பதனைக் கூறிவிட்டு, இன்பதுன்பங்கள் வாழ்க்கை நியதி என்றும், இறைவனிடத்தே நமது பிரச்சினைகளை ஒப்படைத்து விடுதலே மேலான உபாயமாகுமென்றும் கூறினார்கள்.

**மதிப்பீட்டுரை:-**

மதிப்பீட்டுரையை நிகழ்த்திய சைவப்புலவர் நித்தியதசீதரன் அவர்கள் அரும்பெருஞ்சோதியாக ஞானச்சுடர் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றதென்றும், நந்திக் கொடியே நமது கொடியென்றும், நாம் தர்ம கைங்கரியப் பணிகளுக்குக் கிள்ளிக் கொடுப்போமாயின், இறைவன் நமக்கு அள்ளிக் கொடுப்பானென்றும், நாமே நமக்குத் துணை, நன்றும் தீதும் பிறர்தர வாரா மானுடரும் தெய்வமாகலாம் சினம் ஆற்றப்படவேண்டியது என்றினை போதம் தரும்வகையில் ஞானச்சுடர் ஞான நன்முத்துக்களைத் தந்துகொண்டிருக்கின்றது என்று கூறினார்கள்.

நன்றியுரை, பூஜாராதனைகளுடன் வைபவம் இனிது நிறைவெய்தியது.

உ

# சுடர் தரும் தகவல்

## தொண்டு

நமது மனதை சுத்தமாக வைத்திருப்பதற்கு நாம் செய்யும் சேவைகள் ஒரு காரணமாக அமைகின்றது. அதன் பலனாக எமது அகங்காரங்கள் அகன்று எவ்வுயிரையும் தன்னுயிர்போல் மதிக்கும் பெருநிலைக்கு எம்மை ஆளாக்குகின்றது.

சேவை என்பது தொண்டினையே குறிக்கும். தொண்டு பிரதியுபகாரம் கருதாமல், தெளிந்த மனத்துடன் மனம் விருப்பிச் செய்வதாகும். ஆன்மீகத் தொண்டு, அறத் தொண்டு, சமூகத்தொண்டு என்று தொண்டு பல வகைப்படும். ஆன்மீகத் தொண்டு செய்வதற்கு மூலகாரணமாக அமைவது தெய்வ சிந்தனையாகும். அதனடிப்படையில் ஆன்மீகநாட்டம் ஏற்படுகின்றது. அது இல்லாதவர்கள் கடவுளுக்கோ அல்லது இறையடியார்களுக்கோ தொண்டு செய்வது கடினம்.

ஆனால் மக்களுக்குச் செய்யப்படும் சேவை, தொண்டு இறைவனுக்குச் செய்யப்படும் சேவையாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு மனிதரிடத்தும் இறைவன் உறைகிறான் என்னும் அடிப்படையில் மக்கள் சேவை மகேசன் சேவை என்று ஆகின்றது. அடுத்தவனும் மனிதன், அவனுக்கு உதவுவதன்மூலம், தொண்டு செய்வதன் மூலம் இறைவனுக்குத் தொண்டுசெய்வது போலாகிறது. மக்கள் தொண்டு செய்பவனுக்கு மனத்தூய்மையும், பிறர்நலன் பேணும் மனப்பாங்கும், மனப்பக்குவமும் இன்றியமையாதவை.

தன்னலம் கருதாது, பிரதிஉபகாரம் எதிர்பார்க்காது தூய்மையான மனத்துடன் நலிந்து போனவர்களுக்கு, நொந்து போனவர்களுக்கு உதவுபவனும் பணிவிடை செய்பவனுமே உண்மையான தொண்டன், சேவையாளன். நாம் எம்மைச் சார்ந்த சமூகத்துக்கு உளப்பூர்வமாக, உண்மையாக தொண்டாற்றும்போது அதன்மூலம் நாம் பெருவாழ்வினை அடையலாம். மனிதாபிமானம், மனிதநேயம் உள்ள எவரும் அடுத்தவனுக்கு உதவும், தொண்டுசெய்யும் இயல்புடையவனே அந்த இயல்புடன் உண்மையும், நேர்மையும் சேர்ந்தாலே அவன் தொண்டனாவான். அடுத்தவன் கஷ்டத்தை, துன்பத்தை தான் அனுபவிப்பதுபோல் உணர்ந்தவனால் மட்டுமே முழுமையான தொண்டு செய்ய இயலும்.

ஆனாலும் இன்றைய காலத்தில் சமூகத்தொண்டு செய்யப் புறப்படுபவர்களில் கணிசமானோர் பிறர்நலன் பேணுவதைவிட, சுயநலன் பேணுவதற்கு முயல்வதையே காணமுடிகின்றது. தமது புகழ், பதவிகளைப் பேணுவதற்கு மக்களுக்குச் செய்யும், செய்துகொண்டு இருக்கும் தொண்டை விளம்பரப்படுத்தி தமது நிலையை திடப்படுத்திக் கொள்கிறார்கள். நல்ல தொண்டன் தான் செய்யும் பணியைத் தனக்குப் புகழ்சேர்க்கப் பயன்படுத்தமாட்டான். ஆகையால் நாம் உளப்பூர்வமாக தொண்டுசெய்யும்போது உள்ளம் பெருங்கோயிலாகும். அக்கோவிலுள் இறைவன் உறைவான் என்பது திண்ணம்.

அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே.

(தாயுமானவர்)

உ

# முருகா! நமோ நம – திருப்புகழ்

செந்தமிழ் தந்த சேயே நமோ நம
செல்வச் சந்நிதி யுடையாய் நமோ நம
கந்தனே நம கர்த்தா நமோ நம
கமலச் சேவடி யுடையாய் நமோ நம

சிந்தை செய்யடியார்பால் சென்றிடும்
சேயோனே முத்துக் குமாரா நமோ நம
வந்தனை செய்வோர் வாழ்வே நமோ நம
வடிவேலா நம விசாகா நமோ

கூவும் சேவற் கொடியாய் நமோ நம
குவலயம் சுற்றும் மயிலாய் நமோ நம
நாவில் பாட்டை நயப்பாய் நமோ நம
நம்பனே கடம்ப நமோ நம

ஆறுபடை வீட்டில் அமர்வாய் நமோ நம
ஆறு மாமுகத் தையா நமோ நம
கூறு வேல்கைக் கொண்டாய் நமோ நம
குமர நாதனே நமோ நம

அன்னக் கந்தனா யமர்ந்தாய் நமோ நம
ஆலிலை யன்னம் புசிப்பாய் நமோ நம
பின்னம் ஒன்றின்றி எங்களை வாழ
பெரிதாய் வைத்தஎம் பிரானே நமோ நம

ஈழ நாட்டினில் தொண்டைமா னாற்றில்
இருந்தே எங்களைக் காப்பாய் நமோ நம
வாழ எமையெல்லாம் வைத்தாய் நமோ நம
வளரும் ஞானச் சுடராய் வா நமோ நம

*முதுபெரும்புலவர்,*
*கலாபூஷணம்*
*வை.க. சிற்றம்பலவனார்.*

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

திரு நா. உமாசங்கர்
(கயூரி வீடியோ விஷன் அச்சுவேலி)

திரு பொ. பாலசிங்கம்
(பத்தமேனி அச்சுவேலி)

திரு சி. நடேசமூர்த்தி J.P
(ஆஸ்பத்திரிவீதி அச்சுவேலி)

திருமதி மாதர்க்கரசி பொன்னுத்துரை
(சிவசக்திகோவிலடி அச்சுவேலி தெற்கு அச்சுவேலி)

திரு சி. கனகசபாபதி
(சிவன்கோவிலடி ஆவரங்கால் புத்தூர்)

திரு ம. குலநாதன்
(நாதன் கராஜ் ஆவரங்கால் புத்தூர்)

திரு வீரையா சிவஞானம்
(நவக்கிரிமேற்கு புத்தூர்)

திரு க.கு. கிருபாகரராசா
(பிரதானவீதி ஆவரங்கால்)

திரு S. சந்திரகுலம்
(துஷி மினிசினிமா ஆவரங்கால்)

திரு ச. மகாதேவன்
(ஜெயந்தி என்ரபிறைஸ் ஆவரங்கால்)

திரு ந. யோகேஸ்வரன்
(பாடசாலைவீதி கோண்டாவில்)

திரு த. இராசேஸ்வரன்
(இராஜ உதயம் அல்வாய்)

திரு ம. இரங்கநாதன் [ஆசிரியர்]
(நெல்லியோடை அச்சுவேலி)

திரு த. விவேகானந்தன்
(சிவசக்தி பல்பொருள் வாணிபம், மந்திகை)

திரு நா. சந்திரசேகரம் (பொருளாளர்)
(வேவிலந்தை முத்துமாரியம்மன் தேவஸ்தானம் அல்வாய்)

திரு சி. பத்மநாதன் J.P
(கனன் போட்டோபிரதி நிலையம், பருத்தித்துறை)

திரு V.S.P குமார் (ஸ்ரீகுமார்)
(உரிமையாளர் கல்பனா ஸ்ரோர்ஸ் அச்சுவேலி)

திரு சி. சிவம்
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை நெல்லியடி)

திரு இ. சங்கரலிங்கம்
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

திரு இராமசாமி திருச்செல்வம்
(தலைவர் பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்)

திரு நா. நவராஜ்
(உளவள துணையாளர் யாழ்ப்பாணம்)

திரு அ. வரதராசா
(66, வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

திரு வே. நடராசா
(தும்பளை மேற்கு)

திரு சி. கிருஸ்ணபிள்ளை J.P
(ஆவரங்கால்)

பொதுமுகாமையாளர்
(வலிகிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம் அச்சுவேலி)

பொதுமுகாமையாளர்
(பனை தென்னைவள அபிவிருத்தி கூ.சங்கம் அச்சுவேலி)

திரு சி. சந்திரலிங்கம் J.P
(பதிவாளர் மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை)

திரு செ.க. செல்வநாயகம்
(செல்வா ஸ்ரோர்ஸ் ஆவரங்கால்)

திரு க. இராசதுரை
(கிராம உத்தியோகத்தர் ஆவரங்கால்)

திரு சோமசுந்தரம் செல்வக்குமார்
(சன்சில்க் றைக்கிளின் சென்ரர் G.P.S) றோட் கல்வியங்காடு)

திரு இ. சொக்கலிங்கம்
(இளைப்பாறிய ஆசிரியர், நாவற்குழி)

டாக்டர் S. யோகேந்திரன்
(பொறுப்பதிகாரி, மத்திய மருந்தகம் தம்பிலுவில்)

தலைவர்
(சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)

திரு நா. குகன்
(குகன் ஸ்டுடியோ பருத்தித்துறை)

திரு சோ. பாலேந்திரன்
(பாலன் விற்பனை நிலையம், பருத்தித்துறை)

திரு இ. மனோகரன்
(மனோ லைற் கோப்பாய்)

திரு தா. முத்துவேலு
(சந்நிதி வீதி உடுப்பிட்டி)

திரு அ. தவராசசிங்கம்
(களஞ்சியப்பொறுப்பாளர் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

திரு சி. விபுலானந்த அழகள்
(லிகிதர் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

திரு கு. மாணிக்கராசா
(கிளை முகாமையாளர் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

திரு ந. ஜெயக்குமார்
(விற்பனையாளர் உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

திரு சி. நந்தகுமார்
(வங்கி ஊழியர் உரும்பராய்)

உரிமையாளர்
(உமாபதி தொலைத்தொடர்பகம் உரும்பராய்)

திரு சு. ஸ்ரீஸ்கந்தாரம்

(தபாலதிபர் புன்னாலைக்கட்டுவன்)

திரு கு. லோகேந்திரன்

(மில் ஒழுங்கை மல்லாகம்)

திரு இ. அருந்தவராசா

(விற்பனையாளர் வாசிகசாலையடி உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)

திரு வீ. கிருஸ்ணராசா

(ஆசிரியர் மானிப்பாய் இந்துக்கல்லூரி)

திரு க. பாலசுப்பிரமணியம்

(பதிவாளர் இமையாணன்)

திருமதி சிவராஜா

(நல்நடத்தை உத்தியோகத்தர் கல்வியங்காடு)

திரு இராசையா சற்குணதாஸ்

(ஊரெழு கிழக்கு சுண்ணாகம்)

திரு N. ஜெயா

(பஞ்சுகடை சிவன் வீதி உரும்பராய்)

திரு இ. விஜயகருணா

(விதுரன் மோட்டோர்ஸ் ஆவரங்கால் புத்தூர்)



# கணபதி

செல்வி கார்த்திகா சரவணபவன் அவர்கள்

வினைகள் அகற்றும் தெய்வமாய் வழிபடப்படுபவர் கணபதி. அறுவகைச்சமய நெறியில் காணபத்தியம் என்பது கணபதி வழிபாட்டின் சிறப்பினைப் பேசுவது. கணபதி வழிபாட்டின் தொன்மையையும் சிறப்பினையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அந்தவகையில்,

ஆதி இலக்கியமான ரிக் வேதத்தில் 3ம் மண்டல 23ம் செய்யுளில்

*கணானாம் த்வா கணபதிம் அவாமஹே* என வந்துள்ளது.

கணபதியைப் பிரம்மத்துடன் ஒன்றுபடுத்தி "கணபதி பிரம்மா" என்று முன்னூல்கள் குறித்ததாக ஐதரேய பிராமணம் கூறுகிறது. ரிக்வேத தைத்தீரிய ஆரண்யத்தில் "தந்தி" என்ற சொல் கடவுளைக்குறிப்பதாக அமைகிறது. கணபதி காயத்திரி "தந்தோதந்தி பிரசோதயாத்" என வருவது கொண்டு தந்தி என்பது தந்தத்தையுடைய கணபதியைக் குறிப்பது எனலாம்.

யசுர் வேதத்தோடு தொடர்புடைய மானவ ஹிருகிய சூத்திரத்தில் நான்கு விநாயகர் பற்றிக் கூறப்படுகிறது. வராக மிஹிரரின் ப்ருகத் சம்ஹிதை விநாயகர் உரு அமைக்கும் இலக்கணத்தைக் கூறுகின்றது. இதன்மூலம் வராஹமிகிரர் காலத்தின் முன்பே விநாயகரைப் படிம வடிவில் வணங்கும் முறை ஆரம்பித்தது என அறியமுடிகிறது. யாக்ஞவல்ஹியரின் நீதி நூல்களில் பிரம்மாவும் உருத்திரரும் நியமித்த கணநாதராக விநாயகர் குறிப்பிடப்படுகிறார்.

கணபதி பெயரிலும் இரண்டு உபநிடதங்கள் உள

1. கணபதி உபநிடதம்
2. ஏரம்ப உபநிடதம்.

இவை கணபதியிடம் இருந்தே உலகங்கள் தோன்றின என்றும் அவரே அனைத்துமானவர் என்றும் போற்றும்.

வேதத்தில் கூறிய அறங்களை விளக்கும் ஸ்மிருதிகளில் மனுஸ்மிருதி, பராசர ஸ்மிருதியில் கணபதி, சிவன், விஷ்ணு, பார்வதி, சூரியன் போன்றோரை ஒவ்வொரு வீட்டிலும் வழிபட வேண்டும் எனக்கூறும். இது பஞ்சாயதன பூஜை ஆகும்.

விநாயகர் பற்றிய கதைகள் புராணங்களில்

1. ஆண்பெண் யானைகளைச் சிவனும் பார்வதியும் காணல் - திருவலிவலம் சம்பந்தர் தேவாரம் 5
2. கொம்பு ஒடித்தமை - கஜமுக சம்காரத்தில்
   - பாரதம் எழுதுகையில்
3. திரிபுர தகனத்தில் சிவன் கணபதியை வழிபட்டமை - அச்சது பொடிசெய்த அதிதீரா

4. மாங்கனி பெற்றமை
5. காவிரி உற்பத்திக்காய் அகத்தியர் கமண்டல நீரை இறைத்தமை
6. ஒளவையைக் கயிலை சேர்த்தமை
7. முருகனுக்கு வள்ளியை மணம் செய்வித்தமை
8. நம்பி நிவேதனமுண்ட பொள்ளாப்பிள்ளை

போன்ற வரலாறுகளில் விநாயகர் பெருமை பேசப்பட்டது.

தமிழ் இலக்கியத்தில் விநாயகர்

தேசிக விநாயகம் பிள்ளை முத்தொழில் புரிபவராக விநாயகரைப் போற்றுவார்.

திங்களொடு கங்கைமுடி சேர்த்தசிவன் நீயே
திரிபுரங்கள் நீறுபடப்பார்த்தசிவன் நீயே
சங்கினொடு சக்கரங்கை தாங்கியமால் நீயே
தசமுகனைப் போரிலுயிர் வாங்கியமால் நீயே
நங்கைகலை மங்கைதவழ் நாவின் அயன் நீயே
நாரணனார் உந்திதரு பூவிலயன் நீயே
எங்குமுள்ள பரம்பொருளே என்றுமுள்ள பொருளே
யானைமுகப்பொருளேவந் தேழையெனக்கருளே

பாரதியார் பாடல்களில் விநாயகர் நான்மணிமாலை சிறப்பானது.
***"மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்"*** என்று கூறுவார்
கச்சியப்பர் விநாயக புராணத்தில் விநாயகர் பெருமை பேசியுள்ளார்.

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

*அருணகிரிநாதர் திருப்புகழில்*

கைத்தல நிறைகனி .......... என வரும் திருப்புகழில் விநாயகரைப் போற்றியுள்ளார். ஒளவையார் விநாயக அகவல் மூலம் விநாயகரின் பெருமை பேசியுள்ளார். இது 71 அடிகள் கொண்டது. 13 அடிகளில் விநாயகர் திருவுரு வர்ணனை பேசப்படும். மேலும் குருவாய் அருளல், முன்வினை தீர்த்தல் என்று ஆன்மீக அனுபவமும் பேசியுள்ளார். மேலும்

"வாக்குண்டாம் ......"

"பாலும் தெளிதேனும் ....." விநாயகரைப் போற்றி ஒளவை அருளிய பாடல்கள் வழி விநாயகர் சிறப்பைப் பேசியுள்ளார்.

உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயனில்

"நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ்சரக்கன்று காண்" என்பார்

**கல்வி அறிவினால் கடவுளை அடைய முடியாது.**

மெய்கண்டார் சிவஞானபோதத்தில்

*கல்லால நிழல்மலை வில்லார்..* காப்புச்செய்யுளில் கணபதியைப் போற்றுகிறார்.

சேக்கிழாரது பெரியபுராணம்

*துடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக் .*

*கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்.* எனக் கணநாதனைப் போற்றி நிற்கிறார்.

சயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியில்

*"ஐங்கரத்தொரு களிற்றுக்கன்பு செய்வாம்"* என்பார்.

கல்லாடம் விநாயகர் கஜமுகனை வதைத்தது, அம்மையப்பரை வலம் வந்தது போன்ற புராணச் செய்திகளைக் கூறியுள்ளது.

11ம் திருமுறையில்

1. திருவிரட்டை மணிமாலை
2. திருமும்மணிக்கோவை
3. திருவிரட்டை மணிமாலை என்பவை கணபதி பற்றிக் கூறும்.

திருமாளிகைத்தேவர் திருவிசைப்பாவில்

"அனகனே, குமர, விநாயக, கனக அம்பலத்தரசே " என்பார்

திருமூலர் "ஐந்து கரத்தனை, ஆனை முகத்தனை" அடி போற்றுதலைப் பாடியுள்ளார்.

அப்பர் பாடல்களில்

"பலபல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக்கிட்டுத்திரியும் கணபதி என்னும் களிறும்"
குமரனும் விக்ன விநாயகனும் போற்றிசைப்ப"

"ஆறுமுகனோடு ஆனைமுகற்கு அப்பன்" போன்ற அடிகளில் விநாயகரைப் போற்றியுள்ளார்.

சம்பந்தர் பாடல்களில்

பிடியதனுருவுமை........
கரியின் மாமுகமுடைய கணபதி தாதை.... எனப் போற்றியுள்ளார்.

புறச்சமயத்தில் கணபதி

புத்தர் இராசக்கிருகத்தில் ஆனந்தர்க்குக் "கணபதி ஹிருதயம்" என்ற மந்திரத்தை உபதேசித்தார். அசோகனது மகள் சாருமதி நேபாளத்தில் விநாயகருக்குக் கோயில் கட்டியதை அறியலாம். கணபதி ஹிருதயத்தைப் பௌத்தர் இந்நாளிலும் போற்றி வருகின்றனர்.

**இறைவனிடம் இதயம் நூறுக்குநூறு பதியுமானால் இறைவனைக் காணலாம்.**

தத்துவம்

யானை தன் திருவடியின் கீழுள்ளோரைத் தன் தலைமேல் தூக்கி வைப்பதுபோலவே, தன்னடி சேர்ந்தாரை வாழ்வில் உயர்த்தும் தெய்வம் கணபதி. அசையும் காது அடியவரை சாபவெம்மை தாக்காது காக்கும். ஐந்து கரங்கள் ஐந்தொழிலை உணர்த்துவன. மோதகம் பூவுலகம். தான் செல்லும் பாதையில் இடரகற்றித் தொடர்ந்து செல்லும் யானைபோல வழிபடுவார் வாழ்வின் பாதைக்கு வழிசமைத்தவர் விநாயகனே பிரணவத்திலிருந்த விந்துவும் விந்துவிலிருந்து நாதமும் அதிலிருந்து உலகமும் உயிர்களும் ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றின எனத் தத்துவ நூல்கள் கூறும். சுழி விந்துவையும் கோடு நாதத்தையும் குறிப்பன. பிரணவம் அ+உ+ம் இவை முறையே படைத்தல் காத்தல் அழித்தலைக் குறிப்பன.

கணபதி தென்மேற்கில் உறைபவர் கன்னிமூலை கணபதி எனச் சிறப்புப்பெறுகிறார். வழிபாட்டு முறையில் மிக எளிய வழிபாட்டினை உவந்தேற்பவர் கணபதி. ஆற்றங்கரை, தெருவோரம் மரநிழலில் அமைக்கப்பட்டுப் போற்றப்படுபவர். மஞ்சள் உருண்டையிலும் சாணத்திலும் இருத்தி வழிபடப்படுபவர்.

இடரகற்றி எம் வாழ்வை உய்விக்க விக்கின விநாயகரைப் பணிந்து போற்றுவோமாக.

## பகைவனுக்கு அருளும் உள்ளம்

ஒரு முனிவர் மாமரத்தடியில் அமர்ந்து தியானம் செய்து வந்தார். மரம் பழுத்து பழங்களால் நிரம்பியபோது, அந்த வழியாகச் சென்ற இருவர் பழங்களுக்காக மரத்தின்மீது கற்களை விட்டெறிந்தார்கள். ஆகவே சில பழங்கள் கீழே வீழ்ந்தன. சில கற்கள் முனிவர்மீது விழுந்து அவரைக் காயப்படுத்தின. அந்த நாட்டு அரசன் முனிவர்மீது பெரிதும் பக்தி கொண்டவன். அவன் நாள்தோறும் முனிவரின் இருப்பிடத்திற்குச்சென்று அவரைத் தரிசிப்பது வழக்கம்.

அன்றைய தினம் அரசன் தரிசனத்திற்கு வந்தபோது, முனிவரின் உடலிலிருந்த காயங்களைக்கண்டு திடுக்கிட்டான். அவன் பணிவோடு வணங்கி, "காயத்திற்கான காரணம் என்ன?" என்று விசாரித்தான். முனிவரும் நடந்ததை அரசனிடம் தெரிவித்தார்

முனிவரிடம் விடைபெற்று புறப்பட்ட அரசன் வழியில் காவலாளிகளை அழைத்து, "முனிவருக்குத் தீங்கிழைத்தவர்களைக் கண்டுபிடித்து சிறையுள் அடையுங்கள்!" என்று உத்தரவிட்டான். அவ்விதமே காவலாளிகள் அந்த இரண்டுபேரைக் கண்டுபிடித்து சிறையில் அடைத்தனர். 'இந்தச் செய்தியைக்கேட்டு முனிவர் மகிழ்ச்சியடைவார்!' என்று நினைத்து அரசன், முனிவரிடம் சென்று விஷயத்தைச் சொன்னான்.

ஆனால் முனிவர், "இந்த மரங்கள் தன்மீது கற்கள் வீசிய மனிதர்களிடம் கோபித்துக்கொண்டு அவர்களுக்குப் பழங்கள் தராமல் இருந்ததில்லை. மரங்களே இப்படி இருக்கின்றன. அவற்றைவிட அறிவிலும், குணங்களிலும் உயர்ந்த நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அந்த இருவரையும் உடனே விடுதலை செய்யுங்கள். "இனிமேல் இப்படிச் செய்யாதீர்கள்' என்று அறிவுரை கூறி அவர்களை அனுப்பிவிடுங்கள்" என்று அரசனிடம் கூறினார்.

**இறைவனிடம் பயம் ஏற்பட்டாலன்றி நல்லொழுக்கம் உண்டாகாது.**

உ

# சேரவாரும் செகத்தீரே!

இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

'அரிது அரிது மனுடராய்ப் பிறத்தல் அரிது' என்பது ஔவை மூதாட்டியின் கூற்று. இவ்வுலகில் மனிதப்பிறவி ஒரு புனிதப்பிறவியாகும். இந்தப் பிறவி நமக்குக் கிடைத்தது நாம் பூர்வீகத்திலே செய்த புண்ணியப் பலனாலாகும். ஆகவே இந்தப் பிறவியிலேயே நாம் நல்லனவற்றைச் செய்து நல்ல பலனையும் அனுபவித்து விட வேண்டும்.

எப்போதும் எந்நேரமும் நன்மைகளையே செய்து வாழ்ந்திருப்போமேயானால் நமக்கு எல்லாமே நன்மையாய் நடக்கும். அதை விடுத்துத் தீமைகளையே சிந்தித்து, தீமையாய் நடந்தால் எமக்குத் தீமையே நேரும். இது உலக நியதி.

போதும் என்ற மனம் எம்மில் எத்தனைபேருக்கு உண்டு. போதாமை என்ற பண்புதான் பெரும்பாலும் பரவி நிறைந்துவிளங்குகின்றது. 'போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து' என்பது ஏட்டளவில்தான். செயலில் இல்லை. மனிதருக்கு ஆசை என்ற ஒன்று இருக்கும் வரை அவலமும் தொடர்ந்து இருக்கத்தான் செய்யும்.

'ஆசையறுமின் ஆசையறுமின் ஈசனோடாயினும் ஆசையறுமின்' என்ற வாக்குப்படி நாம் எதிலும் ஆசையும் பற்றும் அதிகம் வைக்கக்கூடாது. கடவுள் மீது கூட ஆசை வைக்கக் கூடாது. பக்தி தான் வைத்தல் வேண்டும். அதுவும் உண்மையான பயபக்தி இருக்க வேண்டும். பக்தி வந்தால் சித்தி கிடைக்கும்.

நம்மிற் பெரும்பாலானோர் கடமையைச்செய்யத் தவறிவிடுகிறோம். செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் தாமாகவே உரிமைக்காகப் போராடுவார்கள். 'கடமை' என்பது உரிமைதான். அந்தக் கடமையைக் கண்ணாகக் கருதி உண்மையாக நடந்தால் நிச்சயம் நிம்மதி கிடைக்கும்.

இறைவனைக் காணவேண்டும். அவனுடன் பேசவேண்டும். அவனோடு இருக்க வேண்டும் என்று சதாகாலமும் நாம் நினைத்து வருவோமேயானால் அது நிச்சயம் பலிக்கும். தன்னம்பிக்கையோடு உண்மையாக இருந்தால் இறைவன் இன்னருள் புரிவான். மனித வாழ்வில் நேர்மை, நீதி, நியாயம், உண்மை, அன்பு, மனிதாபிமானம் என்பன நிச்சயமாகப் பங்கெடுக்க வேண்டும். இவை இல்லையெனில் மனிதநேயத்துக்கு அர்த்தமில்லாமற் போய்விடும்.

இன்று நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் யார் காரணம்? நாங்களே தாம். 'தினை விதைத்தவன் தினையறுப்பான் வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்பதில் எவ்வளவு உண்மை பொதிந்திருக்கிறது.

நாட்டில் நடைபெறும் அத்தனை அனர்த்தங்களுக்கும் வித்திட்டவர்கள் வேறுயாருமல்லர். நாங்களே! எல்லோருமே தாம் தமக்கு என்று சிந்தித்துச் சுயநலத்துடன் செயற்பட்ட காரணத்தால் இது வந்தது. பொதுநலத்துடன் உண்மையாக நடந்திருந்தால் இத்தனை துன்பங்கள் வந்திருக்கமாட்டா.

கந்தபுராணத்தைப் படித்துப் பாருங்கள் இதற்கு விடை இருக்கிறது.

**இந்தக் கலியுகத்தில் உண்மையைக் கடைப்பிடிப்பதே பெரிய தவமாகும்.**

சூராதி அவுணர்கள் ஆணவத்துடன் செருக்கு மிகுந்து செயற்பட்டார்கள். முருக வேளே புறப்பட்டுவந்து முற்றுப்புள்ளி வைத்தார்.

ஆறறிவு படைத்த மானுட ஜென் மங்கள் ஏன்தான் இப்படி நடந்து கொள் கின்றனரோ தெரியவில்லை. மற்றவர்கள் பார்த்து ஏளனம் செய்து கைகொட்டிச் சிரிக்கும் அளவுக்கு வந்துவிட்டது நிலமை. இதற்கு என்னவழி?

ஆண்டவனையே முற்றாக நம்பிக்கையோடு வணங்கித் துதித்துப் போற்றவேண்டும். கலியுகவரதனாகிய கந்தப்பெருமானின் கருணையைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். முதலில் நாம் எல்லோரும் ஒன்றுசேர வேண்டும். 'ஒற்றுமையே பலம்', 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்றபடி நாம் அனை வரும் சாதிமத பேதமின்றி ஒன்றுபட வேண் டும். இரண்டு கைகள் ஒன்றுசேரும்போது தான் சத்தம் உண்டாகிறது. ஒரு கையி னால் ஒலியெழுப்ப முடியாது. ஆகவே மக்களாகிய நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து இறைசிந்தனையுடன் நேர்வழியிற் செல்லுதல் வேண்டும். இது நடக்கக்கூடிய காரியமா? என்று நீங்கள் சிந்திப்பது சரி தான்.

ஏன் நடக்காது? நாமும் மனிதர் தாமே. எறும்புகளையும் மிருகங்களையும் பறவைகளையும் பார்த்து நாம் பாடங்கற்க வேண்டும். வலையில் அகப்பட்ட புறாக்கள் ஒரு சேரப்பறந்து ஒற்றுமையுடன் செயற் பட்டமையை வெறும் ஏட்டுப்படிப்புடன் நின்றுவிடாமல் செயலிற்காட்டி நடை முறைப்படுத்தவேண்டியது நமது கடமை.

கடமையைச் செய்யாமல் உரிமை யைப்பெற எண்ணுவது சரியா? உண்மை யான பக்தியுடன் ஆத்மார்த்தமான பூஜை வழிபாடுகள் செய்யாமல் ஆண்டவனை அடைய முடியுமா? பேரானந்தப் பெரு வாழ்வில் ஊறித் திளைக்க முடியுமா?

நாடகத்தால் உன்னடியார்போல் நடித்து வருகின்றோம். வீடகம் கிடைக் குமா? 'ஆமாறுன் திருவடிக்கே அகங் குழையேன்; அன்புருகேன்; தந்ததுன் தன்னைக் கொண்டதன் தன்னைச் சங்கரா ஆர் கொலோ சதுரர்? அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்; யாது நீ பெற்ற தொன்றென்பால்' என்ற மாணிக்கவாச கரின் திருவாசகத்தேன் துளிகள் இங்கே நோக்கத்தக்கன.

கைம்மாறு செய்யாமல் கைமேற் பலன் பெற விழைகின்றோம். அது தவறு. பிரதியுபகாரம் செய்யத்தான் வேண்டும்.

ஆற்றங்கரையானை அன்போடும் பண்போடும் பக்தியோடும் ஏத்திப்போற்றித் துதித்து வழிபட வேண்டும். எல்லாமே நீதான் என்று முற்றாகத் தம்மை ஒப் படைக்க வேண்டும். அனைத்தும் உன் னிடமே தந்தோம். நீதான் எம்மைக் காப்பாற்றுதல் வேண்டும் என்று ஒரு சேர வேண்டுதல் செய்தால் நிச்சயம் அருள்புரி வான். கண்ணீர் விட்டுக்கதறி அழவேண் டும். உள்ளம் நெக்குருகி வழிபாடு செய்ய வேண்டும். தேவர் சிறை மீட்ட தேவாதி தேவனான குமரன் எமது குறை தீர்க்க ஓடோடி வருவான். அன்று தேவர்களுக் காக அசுரரையே அழித்தொழித்த அந்த அமரர் தலைவன் முருகன் இன்று எமக்காகத் தீயவற்றை ஒழிக்க விரைந் தோடி வருவான். சேரவாரும் செகத்தீரே என அழைக்கின்றோம்.

இதை விளையாட்டாக எண்ணக் கூடாது. அனைவரும் ஒன்றுபட்டு விண்ணப்பித்தால் நிச்சயம் பலன் கிடைக் கும். நாம் எல்லோருமாகச் சேர்ந்து

**தூய்மையான உள்ளத்தில் தோன்றும் எல்லா எண்ணங்களும் இறைவனின் குரலே.**

செல்வச்சந்நிதியான், நல்லூரான், கதிர்காமத்தான், மாவிட்டபுரத்தான் என்று கூட்டு வழிபாடு செய்ய அவன் இரங்கி அருள் புரிவான்.

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்து நைந்து நெக்கு நெக்குருகி
ஆட வேண்டும் நான் போற்றி அம்பலத்தாடு
நின் கழற் போது நாயினேன்
கூட வேண்டும் நான் போற்றியிப் புழுக்கூடு
நீக்கெனப் போற்றிப் பொய்யெலாம்
வீட வேண்டும் நான் போற்றி வீடுதந்தருளு
போற்றி நின் மெய்யர் மெய்யனே.

என்று மணிவாசகர் கூறுமாப்போல நாம் கூட்டுப்பிரார்த்தனை செய்ய வேண்டும். சேர்ந்துபாட வேண்டும். உள்ளம் நெக்குருக வேண்டும்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பெருமானின் திருப்புகழை ஓதவேண்டும். அவ்வாறு நாம் பக்தியோடு பாடி வழிபட்டால் கைமேற்பலன் கிடைக்கும். செய்வார்களா?

## கோடும் எழுத்தும்

ஒரு ஜமீன்தாரின் மகனும், ஓர் ஏழைவீட்டுப் பையனும் ஓர் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தார்கள். ஜமீன்தாருக்குப் பணமே பிரதானம். ஆகவே அவர் தன் மகனுக்கு இறை பக்தியைப் புகட்டவில்லை. ஆதலால் அவனுக்குக் கல்வியும் வரவில்லை. ஆனால் ஏழைப் பையனின் தகப்பனார் இறைபக்தியில் மிகுந்தவர். ஆகவே அவரது மகனும் நன்றாகப் படித்துவந்தான்.

ஒருநாள் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு உயர் அதிகாரி வந்தார். ஜமீன்தாரின் பையன் எந்தக்கேள்விக்கும் சரியாகப் பதில் சொல்லாததைக் கண்டு வருத்தம் அடைந்தார். கடைசியில் கரும்பலகையில் 'ட' என்று எழுதி இது என்ன தெரியுமா என்று கேட்டார்.

"தெரியும்" என்று பளிச்சென்று ஜமீன்தாரின் பையன் பதில் அளித்தான். ஆசிரியரும் உயர் அதிகாரியும் இந்த ஒரு கேள்வியாவது தெரியும் என்கிறானே! என்று மகிழ்ந்து விடையை எதிர்பார்த்தனர்.

ஜமீன்தார் பையன், " அது ஒரு கோடு" என்று பதில் அளிக்கவே எல்லோருடைய மனமும் வருந்தியது.

உடனே ஏழைப்பையனைக் கேட்டவுடன் அவன் ட (டாணா) என்று பதில் அளித்தான். படிப்பு இல்லாதவனுக்கு அந்தக் கரும்பலகையில் எழுதியது வெறும் கோடுதான். படித்தவனுக்கு அது 'ட' என்று தெரியும்.

அதுபோல் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு கோயிலில் உள்ள இறைவன் 'சிலை' கல்லாகத்தான் தெரியும். இறைவனை நம்பிக்கையுடன் வழிபடும் பக்தனுக்கு அது கல்லாகவும் தெரியாது. சிலையாகவும் ஏற்கமாட்டான். அதுவே இறைவனின் திருவுருவம் என்று நினைத்துப் போற்றிப் புகழ்ந்து வரம் பெற்று நல்வாழ்வு வாழ்வான்.

**பின்னால் திரும்பிப் பார்க்காதீர்கள் முன்னோக்கிச் செல்லுங்கள்.**

# வாரியார் சுவாமிகள் அருளிய ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள் புராணம்

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

ஒருநாளில் தன் மகனையும் மகளையும் அருகில் அமர்த்தி, கந்தவேள் தன்னையும் தன் உணர்வுகளையும் ஆண்டுகொண்ட விதத்தையும் இருவரும் பிறந்த கதையையும் கூறியதுடன், "உன் தம்பிக்குத் தமக்கையாக அன்றித் தாயாக இருந்து கண்ணை இமை காப்பதுபோலக் காத்திடு" எனக்கூறி நின்றாள். சில காலத்தில், முத்தம்மை மகளையும் மகனையும் வாழ்த்தி வேலவனின் தேனிருக்கும் திருவடிகளில் தானிருக்கச் சென்றடைந்தாள். தாயின் திடீர் மறைவினால் ஆதி கதி கலங்கி, மிக வருந்தி, செய்வதறியாது புலம்பி நின்றாள். அருணகிரியோ அழுதபடி நின்றிருந்தார். ஒருவாறு தேறிய உத்தமியாம் ஆதி தாயின் இறுதிச் சடங்குகளையும் மற்றும் நீத்தார் கடன்களையும் செய்து முடித்தார்.

காலம் கடந்தது வாலிபனான அருணகிரி பயம் என்பதே அறியாமல் மனம்போன போக்கில் வழிதவறி நடந்தார். உண்டி உடை செல்வம் இவற்றில் குறியாக இருக்கும் பொது மகளிர் அருணகிரியாரைத் தழுவினர். அவரும் சமானமில்லாத இன்பமே இந்தச் சம்போகந்தான் என எண்ணி, அழகிய இளம்பெண்களுடன் இனிமையாய் உறவுகொண்டு திரியலானார். செல்வம் கொட்டிக்கிடந்தும் வழிகாட்டச் சரியான ஆள் இல்லாமையும் அவரது போக்கினை ஊக்கப்படுத்தின. தமக்கை ஆதியோ, "இந்தச் சொத்து முழுவதும் தம்பியின் சுகவாழ்வுக்கே" என்ற எண்ணப்படி இருந்து வந்தாள்.

அறிவு கலங்கித் திரிந்த அருணகிரியைச் சில தீய நண்பர்கள் அணுகி, "நீதிநெறி இல்லை. முத்தி இல்லை. மோட்சம் இல்லை. பாவபுண்ணியம் இல்லை. பலனுதவும் தெய்வமுமில்லை. அன்னநடைப் பெண்களுடன் சதா சங்கமிப்பதே பெரிய சுகம். காமசாஸ்திரத்தைவிட மேலான வேதம் உலகில் இல்லை. தேககசுகமே ஏகசுகம்" எனத் தீய உரை கூறினர். இதனால் அருணகிரியார் குற்றம்படிந்த நெறியிலேயே, அச்சம் இல்லா மனத்தினராய், ஆடை அணிகலன்கள் புனைந்து வாசனைத் திரவியம் உடலெங்கும் கமகமக்கப் பொது மகளிர் நிறைந்த வீதியெங்கும் திரிந்தார். அருணகிரியாரின் ஏற்றத்தையும் தோற்றத்தையும் காணும் பரததையர் எல்லாம் "வாரும்! வாரும்!" என அழைத்துச் சுவையொழுகப்பேசி, முத்துப் போன்ற புன்னகை காட்டி, கொவ்வை இதழ்காட்டி, குன்றனைய மார்பகம் காட்டி, வள்ளிக் கொடி போன்ற இடை காட்டி, மஞ்சத்தொழில் காட்டி மயக்கினர். இவரும் கணிகையரின் மோகக் கடலில் மூழ்கி முத்தெடுத்தார். ஆதி அன்போடு கொடுத்த பொருளையெல்லாம் இவர் பரத்தையருக்கு வாரிக் கொடுத்தார். அதனால் ஆதியின் பால் வறுமை விரைந்து வந்து துன்புறுத்தத் தொடங்கியது.

மயக்கும் விழிகொண்ட மங்கையரோ அளவில்லாப் பொருளை அருணகிரி

**உலகப்பற்று காரணமாக ஞானம் மயங்கிவிடுகிறது.**

யாரிடம் பெற்று, உறுதிமிக்க உடலைச் சிதைக்கும் நோய்களை அணிகலன்களாக அவருக்குக் கொடுத்தனர். வாதம், சூலை, சோகை, இருமல் என ஆரம்பமாகி பீனிசம், பிளவை, மூலம் என்னும் நோய்களாக முற்றி, முடிவில் தொழுநோய் வந்து தொற்றிக்கொண்டது. நோயினால் வாடும் தம்பியின் நிலைகண்டு அன்னையிலும் அதிக அன்புகொண்ட அக்காளான ஆதி முருகப்பெருமானிடம் முறையிட்டு வந்தாள். வைத்தியர்களை அழைத்துத் தம்பியின் நோய் தீர்க்கத் தமக்கை முயல்வாள். தம்பியோ மீறிய வேட்கையினால், கூலிக் குத் தீன்னைக் கொடுக்கும் கோதையரின் கோவ்வைச் செவ்வாய் வாய் ஊறலை அமுதம் எனப்பருகவேண்டி மிச்சம் மீதமாக இருந்தபொருளையும் கொடுக்க நேர்ந்ததால் வறுமைநோய் வாட்டியது. குடியிருந்த மாடிவீடு உட்பட அனைத் தையும் இழந்து, மரத்தின்கீழ் வாழும் நிலை விரைந்து வந்தது. வறுமையினால் ஆதியின் இளமையும் அழகும் ஒருங்கே மாய்ந்தன. பட்டாடை சிற்றாடை ஆனது. இவ்வாறு வறுமையால் வாடி வெறுமை யாய் நின்றாலும் உள்ளத்தால் ஆதி வருந்தவில்லை. இந்நிலை எதைப்பற்றியும் கண்டுகொள்ளாமல் தறிகெட்டு அலைந்து திரிந்தார். ஊரார் ஆதியை அவமானப்படுத் தினர். அன்புடையோர் அகன்று போயினர். வறுமையின் எல்லைக்கு வந்தும் கூட, "பொதுமகளிரிடம் போகப் பொருள் தா" எனத் தம்பி கேட்பார். தமக்கையோ கைப் பொருளில்லாக் காரணத்தால் உள்ளம் உலைந்து நின்றாள். பரத்தையரோ தங்கம் தராவிடில் அங்கம் தழுவ மறுத்தனர். அத னால் ஆதி, தம்பி விரும்பும் பெண்கள் வீட்டுக்குச்சென்று, அவர்கள் உவப்புறும் வண்ணம் பணிவிடைசெய்து, தாபமுற்ற தன் தம்பியின் வேட்கையைத் தணித்து அருளுமாறு வேண்டி நின்றாள். தம்பியின் வாழ்வு கருதித் தன்வாழ்வு பற்றி வருந்த வில்லை அவள்.

தொழுநோயால் திரு ஒழிந்து, உருவழிந்து, உடல் தளர்ந்து, திடம் குலைந்து துன்பம் மிகுந்த அருணகிரி நீட்டலும் முடக்கலுமின்றிப் பாயில் படுக்க லானார். அந்த நிலையிலும் பொது மகளிரின் வேட்கையே மேலோங்கி நின்றது. தன் உடல் உழைப்பினால் வரும் சிறு ஊதியத்தைக் கொண்டு நூலாகிப் போன நிலையிலும் தன் தம்பியை நோவாது காத்து வந்தாள். அருணகிரிக்கு வயது இருபத்தெட்டு ஆனது.

ஒருநாள் அருணகிரியார் தன் தமக்கையிடத்தில் "சகோதரி! இன்று ஒரு பெண்ணிடத்தில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்திடில் என் ஆசை தீர்வேன்" என்று இரந்து நின்றார். "என்னிடம் தரு வதற்கு பொன்னோ பொருளோ எதுவுமில்லை. உன்னிடம் அன்புகொண்டு உனக்காக வாழும் என்னைத்தவிர உன்பாற் பிரியம் செலுத்த யாருமில்லை. இதுவரையும் இருபால் இணைவுக்கு இணங்கிய பெண்களெல்லாம், நோயினால் நூலாகிப்போன உன்னை நெருங்கவே மறுக்கின்றனர். நீ ஒரு பால், நான் ஒரு பால் இதுவும் ஒருவகைப் பொருத்தமே. ஊன்றிப் பார்த்தால் என்பால் நீயும் உன் பால் நானும் உள்ளத்தால் ஒன்றியிருக் கின்றோம். இதைத்தவிர இவ்வுலகில் வேறெதுவும் பொருந்திவரக் காணோம்" என்றாள் ஆதி.

உலக இன்பத்தை ஒருசேர அனு பவித்த அருணகிரியாரைத் தடுத்து ஆட்கொள்ளக் கந்தப்பெருமானின் கருணை கைகூடும் காலம் கனிந்து

வந்தது. தூய நெறியினளான ஆதி உரைத்த சொல் அம்பென ஆழப் பாய்ந்த தால் தெளிவானார் அருணகிரி. "சகோ தரியே! உத்தமியே! உன் பின்னவன் என் பொருட்டு உன் மனம் சிறுமைகொண்டு சிதைந்ததே. நீ அன்றாடம் விட்ட கண் ணீரில் நான் மூழ்கிக்குளித்து இன்று கரையேறிவிட்டேன். பார்க்கும் அனைவரும் பழித்துரைக்கும் இந்நிலையில் நான் உயிரோடு இருப்பதில் யாருக்கு என்ன பயன்! இனி வாழேன்! உயிர் துறப்பேன்!" என்று கூறி அண்ணாமலையாரின் திருக் கோயிலினுள் நுழைந்து, சேர மன்னனான வல்லாளராஜன் வகுத்த கோபுரத்தின் உச்சிக்குச்சென்று பூமியை நோக்கிக் குப்பற வீழ்ந்தார். அப்போது நிலமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நித்தியனான ஆறுமுகப்பெருமான் இடக்கையில் வேலேந்தி, மேனியில் பூணூலும் உத்தரிய மும் பொலியத் தோன்றி அருணகிரியா ரைத் தடக்கையில் ஏந்தித் தரைமீது விடுத்தார். "ஆற்றல் உள்ள இளைஞனான நீ இப்படி உயிர்விடத் துணியலாமா? வட புறக் கோபுர வாசலில் உள்ள இறைவன் உன்னைக் காத்து நிற்பான். உலகம் உன்னைப் போற்றி நிற்கும்'' என்று திருவாய் மொழிந்து திருநீறு பூசிக் கடைக்கண் பாலித்து **"சொல்லற்றுச் சும்மா இரு"** என்று இனிமையாகக் கூறி அருணகிரியாரின் தலையில் தன் காலை வைத்துத் திருவடி தீட்சையருளி வடபுறக் கோபுர வாசல் வழியாக மறைந்தருளி னார். தீட்சையின் விளைவாக, யாரும் பெறாத பேற்றினைப் பெற்ற அருண கிரியார் உடல்நோய் - உளநோய் அனைத்தும் நீங்கப்பெற்று, வேறுபாடற்ற மனோநிலையை அடைந்து, கோயிலினுள் மோனத்தவநிலையில் மூழ்கியிருந்தார்.

நடந்தது எதையும் அறியாமல் தன் தம்பியை பல இடங்களிலும் தேடி, ஈற்றில் கோயிலினுள் அருணகிரியாரைக் கண்டு, தன் தாயின் வார்த்தைகளை நினைவுகூர்ந்து ஆனந்தக்கடலில் ஆழ்ந் தாள். ஆதியையும், தம்பியையும் புறத்தே வைத்த ஊர்மக்கள் வெட்கித் தலை குனிந்து வேதனைப்பட்டனர்.

(தொடரும்....

---

உலகில் ஒருவன் தான் செய்ய வேண்டிய கடமையைத் தொடர்ந்து செய்யட்டும். அதில் தீங்கில்லை. ஆனால், இறைவனே எல்லா உயிர்களாகவும் உலகமாகவும் இருக்கிறான் என்ற எண்ணத்தை மட்டும் உறுதியாகக் கொண்டிருந்தால் போதும்.

வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியும் நாம் யாருடன் தொடர்பு கொள்கிறோமோ, யார் மீது அன்பு செலுத்துகிறோமோ, யாருக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்கிறோமோ, யார்மீது தயை காட்டுகிறோமோ அவர்கள் எல்லோரும் இறைவனின் அம்சம்தான். இவ்வாறு அனைவரையும் இறைவன் வடிவமாகக் கருதும்போது எப்படி அவனால் மற்றவர்களைவிட தன்னை உயர்வாகக் கருதமுடியும். மற்றவர்களிடம் கோபமும் வெறுப்பும் எப்படிக் கொள்ளமுடியும். மற்றவர்களுக்கு எவ்வாறு தயை காட்ட இயலும். இவ்வாறு மனிதனை இறைவனாகக்கண்டு அவனுக்குச் சேவை செய்யச்செய்ய ஒருவனின் இதயம் தூய்மை அடைகிறது. விரைவில் அவன் தன்னை ஞான சொருபமான இறைவனின் அம்சம் என்று உணர்கிறான்

**விளம்பரமின்றி தனித்திருந்து ஆன்மீக சாதனை செய்ய வேண்டும்.**

உ

# பூவுலகத்தின் கற்பகதருவாம் பனையும் ஓர் தெய்வீக விருட்சமே!

ப. அருந்தவம் அவர்கள்

மரங்களை வழிபடும் மரபு மிக நீண்டகாலமாக நம்மவர்களால் மேற்கொள்ளப் படும் ஒன்றாகும்.

பண்டைக்காலம் முதல் மக்கள் மரங்களிற்கான வழிபாட்டை இருவேறு வழிகளிற் பின்பற்றி வந்தனர்.

1. மரங்களைத் தெய்வங்களாக வணங்குதல்.
2. மரங்களைத் தெய்வம் உறையும் இடங்களாக வணங்குதல்.

இவ்வாறான முறையில் பனையும் எம்மவர்களாற் போற்றி வணங்கப்பட்ட தாவரமாகக் கொள்ளத்தக்கதொன்றாகும்.

*திருமுறைகள் போற்றும் பனை:-*

தென்னிந்தியாவில் சிவனுக்குரிய பல ஸ்தலங்கள் உள்ளன. அவற்றுட் சில நாயன்மார்களின் பாடல்கள்மூலம் சிறப்புப்பெற்றுள்ளன. அவற்றுள்ளே சிறப்பான திருத்தலங்களில் ஒன்றாகப் போற்றப்படும் திருப்பனந்தாள் அருணாசலேசுரர் கோவிலின் தலவிருட்சமாகக் கொள்ளப்படுவது பனைமரம் என்பது இங்கு நோக்கத்தக்கதொன்றாகும். அதுமட்டுமன்றி, திருஞானசம்பந்தர் காலத்தில் பனந்தோப்புக்கள் பல்லப்பல இருந்ததாகவும், சிவனடியார்கள் பனைவளம் பெருக்குவதில் ஈடுபட்டதாகவும் அக்கால ஆராய்ச்சிக்குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

சிறந்த ஞானியரும் சித்தருமாகிய திருமூலர் தொகுத்து வழங்கிய திருமந்திரமும் பனையின் அருமையை எடுத்தியம்பியுள்ளது.

திருவாசகத்தைத் தந்த மணிவாசகப் பெருமான் பனையின் அழகினை மிக அருமையாகத் தமது திருக்கோவையாரிற் பாடியுள்ளார். "கண்ணார்ந்த பெண்ணை" என அவரருளிய தொடருக்கு கண்ணுக்குப் பொருந்திய அழகுடைய பனை எனப் பெரியோர் உரை கூறுவர்.

*சங்க இலக்கியம் போற்றும் பனை:-*

சங்க இலக்கியங்களிலும் பனை வணக்கம் பற்றிய பல செய்திகள் உள. நற்றிணையில் கடவுள் உறையும் விருட்சமாகப் பனை போற்றப்பட்டுள்ளது. இதேபோல் புறநானூறும் பனை குலமரபுச்சின்னமாகப் போற்றி வணங்கப்பட்டதனை எடுத்துக்காட்டி யுள்ளது.

பனையானது சிவனுடன் மட்டுமன்றி விஷ்ணுவுடனும் தொடர்புடையதாகப் பேணப்பட்ட ஓர் விருட்சமாகும். விஷ்ணுவின் சகோதரனான பலராமனுடன் பனை தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. இதனைப் புறநானூறு (56: 3-4) பாடல் சிறப்பாக

**ஒருவன் கீழே விழுந்தால் உலகமே அவன்மீது ஓடத் தொடங்கும்.**

விளக்குகிறது.

"கடல் வளர் புரிவளை புரை மேனி
அடல் வெந் நாஞ்சிற் பனைக் கொடியோனும்"

அதாவது பலராமன் கடற்சங்கு போன்ற நிறத்தையும், நாஞ்சிற் படையையும், பனைக் கொடியையும் உடையவன் என அவனின் சிறப்பை எடுத்துக்காட்டியுள்ளது. இதேபோல், புறநானூற்றில் பிறிதோர் இடத்தில்

"மானிறவுருவிற் பனைக் கொடியோனும்" (புறம் 58: 14)

எனக்குறிப்பிடப்பட்டதும் இங்கு நோக்கத்தக்கது.

*மன்னர்கள் போற்றும் பனை:-*

மூவேந்தர் எனப்போற்றப்படும் சேர, சோழ, பாண்டியருள் சேர மன்னர்கள் பனம்பூ மாலை அணிந்து பனையின் சிறப்பைப் போற்றியுள்ளனர். இதேபோல், விஷ்ணுவின் சகோதரனான மகாவீரன் பலராமனும், பிதாமகர் எனப் போற்றப்பெறும் கங்காபுத்திரன் பீஷ்மரும் பனையை மதித்து, பனைமாலை சூடிப் பனையைப் போற்றியதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

*வட இந்தியாவில் பனை:-*

புத்தபிரான் வாழ்ந்த காலப்பகுதியில் பனை ஓர் புனிதமரமாகப் பேணப்பட்ட தாகவும் பல்வேறு ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

*பண்டைய ஈழநாட்டில் பனை:-*

இலங்கையில் அனுராதகம எனும் கிராமத்தினை அனுராதபுரம் எனும் நகராக்கி, இதனை இலங்காபுரியின் தலைநகராக்கியவனாகிய பண்டுகாபய மன்னன் நகரின் மேற்குத்திசையில் பனைமரத்தின் கிழ் 'வியாத தேவன் / வியாததேவா' எனும் தெய்வத்தை எழுந்தருளச்செய்து அவருக்குரிய வழிபாட்டை மேற்கொண்டதாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. இங்கு வியாததேவா என்பது சிவனுக்குரிய பெயராகவும் இருக்கலாம். அதாவது நோய்நொடியிலிருந்து நம்மைக் காப்பவராகிய வைத்தியநாதனின் நாமமாகக்கூட இருக்கலாம் என இலங்கையின் வரலாற்றுத்துறை ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இவற்றையெல்லாம் நோக்கும்போது வடநாட்டிலும், தென்நாட்டிலும், ஈழநாட்டிலும் பண்டைக்காலமுதல் பனை ஓர் தெய்வீக விருட்சமாகப் பேணப்பட்டதை உணரமுடிகிறது.

*பனையின் தோற்றம்:-*

பூமியில் வாழும் மக்கள் அனைவருக்கும் தேவையான சகல பொருட்களையும் பிரம்மா படைத்தார். எனினும் மக்களின் குறை தீரவில்லை. மக்கள் எல்லோரும் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். இதனால் சிவன், பிரமன் தன் தொழிலைச் சரியாகச்செய்யவில்லையென்று கோபங்கொண்டார். ஆயினும் உமாதேவியார் சிவனின் கோபத்தைத் தணித்தார். அதன் பயனாக சிவபிரான் தேவர் உலகிலிருந்து

பனைமரங்களைப் பூவுலகிற்கு அனுப்பினார். இவை ஒளிமயமான வெண்ணிறத் தூண்களைப்போல் வானுலகிலிருந்து இறங்கி வந்தன. அவையே பின் பனந்தோப்புக்களாக மாறின என்பது ஓர் ஐதீகக் கதையாகும். இதேபோல் தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ளோர் பனை மரங்கள் காளியாற் படைக்கப்பட்டவை எனவும் கருதுகின்றனர்.

*தமிழர் வாழ்வில் பனை:-*

பிறர் உதவியின்றித் தன் முயற்சியால் வாழ்வதோடு, பிறரிற்குத் தன்னலம் கருதாமல் உபகரிப்பவனைப் பனைக்கு நிகரானவன் என நம்மவர்கள் கருதுவர். எனவேதான் பண்டைக்காலத்தில் மணப்பெண்ணுக்குப் பனையின் ஓலையைத் தாலியாக்கி என்றும் தழைத்து வாழ்வாயாக என்று வாழ்த்திக் கழுத்தில் மாங்கல்ய நாண் ஏற்றி வாழ்வில் கணவன், மனைவியை இணைத்துவிடுவார்கள். தாலியே கணவன். அவன் இல்லையெனில் அவள் அதனை அணிவதில்லை. பனை தன்னிகரில்லாத் தலைவனை நினைவூட்டுகிறது. தாலியும் அதன் கொடியும் தங்கத்தால் செய்யும் மரபு சிறிது காலத்திற்கு முன்னரிருந்தே எம்மவரால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றும் தாலியில் பனை, சூலம், அம்மன் போன்ற குறிகள் நிலவிவருவதைக் காணமுடிகிறது.

*சுகப்பிரசவத்தில் பனை:-*

சுகப்பிரசவம் விரும்பும் பெண்கள் வடதிசைநோக்கி வளர்ந்துசென்ற பனையின் வேரைத்தோண்டி எடுத்து இடுப்பிலே கட்டிக்கொள்வதால் சுகப்பிரசவம் ஏற்படும் என 'வஸ்து குண தீபிகா' எனும் தெலுங்கு வைத்தியநூல் குறிப்பிடுகிறது.

*சிறந்த இருக்கைதரும் பனை:-*

முனிவர்கள் புலி அல்லது மான் தோலில் அமர்ந்து தவம் செய்வார்கள். இதேபோன்ற தன்மை பனைநார் இருக்கைக்கும் உண்டு.

பனை ஓலைப்பாயிலே படுப்பது கண்ணுக்கும், மூளைக்கும் இதமளிக்கும் என இந்திய மருத்துவத்துறை ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

*மூலிகைத் தாவரம் பனை:-*

பனையின் அடிமுதல் நுனிவரை உள்ள அனைத்துப் பொருட்களும் சித்த வைத்தியத்திலும், ஆயுர்வேத மருத்துவத்துறையிலும் பயன்படுகின்றன. நாட்டு வைத்தியத்தில் செந்தூரங்களையும் குளிகைகளையும் பனை வெல்லத்தில் பொதிந்து கொடுப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

*நைவேத்தியப் பொருளாகப் பனை:-*

காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருவன்பார்த்தான் சிவன் கோவிலில் பனம்பழத்தைப் படைத்து வழிபடும் மரபு உண்டு. இதேபோல் வங்க நாட்டில் பனம்பழத்தைக் காளிக்கு நைவேத்தியப் பொருளாகப் படைப்பதையும் இன்றுவரை

தம் வழக்கமாக கொண்டுள்ளனர்.

*பணமரமே பனைமரம்:-*

பனைமரத்தைப் பண்டைக்காலமுதல் கிராமமக்கள் பணமரமாகவே கருதிவருகின்றனர். பனைமரம் மனிதனுக்குத் தேவையான உணவுப்பொருட்களையும், இருப்பிடம் அமைப்பதற்குரிய மரப்பொருட்களையும், குடிசைத்தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருட்களையும், நோய் தீர்க்கும் மருந்துகளையும், எரிபொருட் தேவையையும், மனிதனை நம்பிய கால்நடைகளின் உணவையும் தந்துதவுவனவாக இப்பனை மரங்கள் உள்ளன. இதனாலேயே இதனை எம்மவர் "பூவுலகத்தின் கற்பகதரு" எனப் போற்றுவர். பனையைப் பார்க்கும் வெளிநாட்டவர் இதனை 'அதிசய மரம்' (Tree Of Wonder) என்று போற்றுகின்றனர்.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் நில அளவையாளர் நாயகமாக இருந்த பேர்குசன் என்பவர் யாழ்குடாநாட்டு மக்களின் நாளாந்த உணவில் "நான்கில் ஒரு பகுதியைப் பனை தந்தது என்கிறார். அக்காலத்தில் யாழ்குடாநாட்டில் பதினான்கில் ஒருபாகம் பனை அடர்ந்த பகுதியாக இருந்ததாகக் குறிப்பிடுதலும் இங்கு நோக்கத்தக்கது.

பனையை நாம் அழிக்காமல் விட்டால் அது எம்மைப் பாதுகாக்கும். ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை எமக்கு அள்ளித்தரும். அது மட்டுமன்றி நீர்த்தேக்கங்கள் வற்றுதல், வரட்சி, புயற்காற்று கால்நடை அழிவு, சூழல் மாசடைதல் ஆகியவற்றிலிருந்து எம்மைப் பாதுகாக்கும். எனவே பனைக்கு நாம் செய்யும் நன்றிக்கடன் அதன் விதைகளை மண்ணுட் புதைத்துவிடுதல் ஒன்றேயாகும்.

பனம் விதைகளை நாட்டுவதற்குப் புரட்டாதி மாதம் சிறந்ததாகும். "கன்னித் திங்களில் கருத்துடன் நவராத்திரி விரதம் அனுட்டிக்குங் காலத்தைப் பனம்விதை நாட்டுங் காலமாகக் கொள்ளலாம்" என்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஐயா அவர்கள் கூறுகிறார்.

பனையின் பயன்கருதி, தேடுவாரற்றுக் கிடக்கும் நிலங்கள், வேறு பயிர்நட உதவாத நிலங்கள், புலவு நிலங்கள் போன்றவற்றைப் பனந்தோப்புக்கள் ஆக்குவோம். இன்னும் வீதியோரங்கள், வயற்கரைகள், குளக்கரைகள், வளவு எல்லைகள் முதலிய இடங்களிலும் பனையை வரிசை வரிசையாக உண்டாக்குவோம். இவ்வாறாகச் செய்யின் வரண்ட பிரதேசத்தின் வளம் பெருகும்.

ஒவ்வொரு தமிழ்மகனும் ஒவ்வொரு பனம்விதையேனும் நிலத்தில் நாட்டி அது முளைத்து வளரவழி செய்க. செய்வீர்களாயின் வருங்கால உலகம் உங்களை வாழ்த்திக்கொண்டே இருக்கும்.

பனையை நடுக. பயனைப் பெறுக.

---

சொர்க்கத்தைத்தேடி நாம் எங்கும் போகவேண்டியதில்லை. கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் நாம் காட்டும் தூய அன்பு, நமக்கு உதவ முடியாத ஜீவன்களிடமும் காட்டும் கருணை இவற்றினால் நம்முடைய மனத்திற்குக் கிடைக்கும் நிறைவே சொர்க்கமாகும்.

**அகௌரவத்தைவிட இறப்பதே மேலானது.**

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ் மந்திரம்

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்

சித்த புருஷர்கள் எந்தச்சமயத்தைச் சேர்ந்தவர்கள்? அவர்கள் சிவனை முழுமுதற் கடவுளாக வணங்கும் சைவர்களா? சக்தியை முழுமுதற் கடவுளாக வணங்கும் சாக்தர்களா? விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வணங்கும் வைணவர்களா? வேதாந்திகளா? சைவ சித்தாந்திகளா? என்றெல்லாம் சிலர் வினவுகிறார்கள். இவர்களின் வினாவிற்குத் தவயோகி திருமூலரின் மரபிலே வந்த தாயுமானவர் விடை பகர்ந்துள்ளார். தமது குருநாதன் மௌனகுரு திருமூலர் பரம்பரையில் வந்தவர் என்பதை "மூலன் மரபில் வந்த மௌனகுருவே" எனத் தாயுமானவர் குறிப்பிட்டுள்ளார். சமயபேதம் அகற்றிச் சமரசம் கண்டவர்களே சித்தர்கள் என்பதை

"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே"

எனத் தாயுமானவர் குறிப்பிடுகின்றார். திருமந்திரப் பாடல்களிலே வேதாந்த, சித்தாந்த சமரச நிலையினைத் திருமூலர் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். புராணக்கதைகளை உதாரணமாகக் கொண்டு, தத்துவக் கருத்துக்களை விளக்கும் பல பாடல்களைத் திருமந்திரத்திலே காணலாம்.

திருமந்திரத்தின் இரண்டாம் தந்திரத்தின் ஆரம்பத்திலே அகத்தியம் என்ற பகுதியிலே இரு பாடல்கள் உள்ளன. தமிழ் முனிவர், குறுமுனிவர் என்று போற்றப்படுகின்ற அகத்தியருடைய வரலாறு புராணக்கதைகளிலே கூறப்பட்டுள்ளது. நமது தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கு முதலிலே இலக்கணம் வகுத்தவர் அகத்திய முனிவர் என்றே கூறப்படுகிறது. முருகப்பெருமானுடைய நேரடி உபதேசத்திற்குப் பாத்திரமானவர்களில் அகத்திய முனிவரும் ஒருவராவார். திருக்கைலாயத்திலே நடைபெற்ற சிவன், பார்வதி திருமணத்தைப் பார்ப்பதற்காக எல்லோரும் வடநாடு சென்றார்களாம். அப்பொழுது வடக்குத் தாழ்ந்து தெற்கு உயர்ந்தது. உடனே சிவபெருமான் கட்டளைக்கு இணங்க அகத்தியர் தென்னாடு வந்தார் என்பது புராணக்கதை. அவரோடு தமிழும் சமயமும், ஞானமும் தமிழ் நாட்டிற்கு வருகை தந்தன.

உடம்பின் மூலாதாரத்தில் இருக்கின்ற குண்டலினி சக்தியை யோகிகள் யோக சக்தியாக மாற்றி உடம்பின் ஆறு ஆதாரங்களின் ஊடாக மேலே எழுப்புகிறார்கள். இந்தயோக சக்தியின் ஊடாகப் பெறும் அமிர்தத்தினைச் சுவைத்துப் பேரின்பத்தைப் பெறுகிறார்கள். பிரபஞ்ச வாழ்க்கையில் மயங்கி நிற்பவர்கள் அதைப் போக சக்தியாக மாற்றிப் பிராண சக்தியை இழக்கின்றார்கள். உடம்பில் உள்ள நாதம் அகத்தியம் ஆகும். மூலாதாரத்தின் நடுவில் உள்ள சொரூபமான நாதமே நீ போய் விரைந்து ஓடுகின்ற சீவனின் தலையின் முன்பக்கமாய்ப் பொருந்திக் காண்பாயாக என்பதை அகத்திய முனிவரின் புராணக்கதையோடு இணைத்துத் திருமூலர் கூறியிருப்பதைப்

உழைப்பும் நம்பிக்கையும் சேருமிடத்தில் ஏழ்மை இருக்காது.

பின்வரும் பாடலிற் காணலாம்.

நடுவு நில்லாது இவ்வுலகம் சரிந்து
கெடுகின்றது எம்பெருமான் என்ன ஈசன்
நடுவுள அங்கி அகத்திய நீ போய்
முடுகிய வையத்து முன் இரு என்றானே.

தொடர்ந்து பதிவலியில் வீரட்டம் எட்டு என்ற தலைப்பில் எட்டுப் பாடல்கள் உள்ளன. அட்ட வீரட்டம் என்றால் இறைவன் செய்த வீரச் செயல்களைப் புலப்படுத்து கின்ற எட்டு ஸ்தலங்கள் என்று பெயர்.

1. திருக்கோவலூர் - அந்தகாசுரனை வதம் செய்த இடம்.
2. திருப்பறியலூர் - தக்கன் யாகத்தைத் தகர்த்தெறிந்த இடம்.
3. திருக்கண்டியூர் - பிரமதேவனின் ஒரு தலையைக் கிள்ளிய இடம்.
4. திருவிற்குடி - சலந்தராசுரனை வதம் செய்த இடம்.
5. திருவதிகை - முப்புரங்களை எரித்த இடம்.
6. திருவழுவூர் - கயமுக சங்காரம் நடைபெற்ற இடம்.
7. திருக்கடலூர் - காலனைக் காலால் உதைத்த இடம்.
8. திருக்குறுக்கை - காம சங்காரம் இடம்பெற்ற தலம்.

அட்ட வீரட்டத் தலங்கள் ஒவ்வொன்றிலும் சிவன் நிகழ்த்திய வீரச் செயல்களை மையமாக வைத்துத் தத்துவக் கருத்துக்களைத் தவயோகி எட்டுப் பாடல்களில் விளக்குகின்றார்.

புராணக் கதைகளை எடுத்துக் கொண்டு அவற்றின் உட்கருத்துக்களை விளக்குகிற பல இடங்கள் திருமந்திரத்தில் உள்ளன. இந்த விளக்கங்கள் எல்லாம் சமயங்களின் எல்லைக் கோடுகளைத் தாண்டி நின்று பேசுகின்ற பூரண ஞானியின் கருத்தாகவே காணப்படுகின்றன. திருமந்திரத்தில் வரும் திரிபுரம் எரித்த வரலாறு அப்படிப்பட்ட ஒரு விளக்கமாகவே உள்ளது. மூன்று அசுரர்கள் தங்களுடைய வரத்தின் பலத்தால் மூன்று புரங்களை நிர்மானித்து அங்கிருந்து கொண்டு தேவர்களைத் துன்புறுத்தினார்கள். சிவபெருமான் இந்த மூன்று புரங்களையும் அழித்து, அசுரர் மூவரையும் வதம் செய்து தேவர்களைக் காப்பாற்றி அருளினார் என்பதே புராணங்கள் கூறும் செய்தி ஆகும். இந்தப் புராணக்கதையின் ஊடாக உயர்ந்த சைவசித்தாந்தக் கருத்துக்களைத் தவயோகி விளக்குகின்றார்.

முப்புரம் என்பது உயிரைப் பிணித்துள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களே ஆகும். உயிரைப் பிணித்துக் கேடு விளைவிக்கின்ற இந்த மூன்று அழுக்குக்களையும் பக்திசெய்கின்ற அன்பர்களுக்காக இரங்கிவந்து இறைவன் அழித்து ஆட்கொள்கிறான். முப்புரங்களை அழித்தது என்பது மும்மலங்களை அழித்தது என்பதை யாரும் உணர்வதில்லை. மலபரிபாகம் ஏற்பட்டால்தான் திருவருட்சக்தி ஆன்மாவிற் படியும். மும்மலங்கள் அழிந்தால்த்தான் முக்தி கிடைக்கும் என்ற கருத்தினைத் திருமூலர் பின்வரும் பாடலின் ஊடாக விளக்குகிறார்.

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே

சிவனுடைய மூவகைத் திருமேனிகளில் அருவுருவ வடிவமாக இருப்பது சதாசிவ மூர்த்தமாகிய சிவலிங்க வடிவமாகும். சக்தி சிவத்தினுள் அடங்கிச் செயல்புரிவதை இவ் வடிவம் உணர்த்துகிறது. அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருந்து அருளாட்சி புரியும் இறைவனைக் குறிக்கும் குறியீட்டு வடிவம் சிவலிங்கம் என்பதைக் காணாத

அருவனுக்கும் உருவனுக்கும் காரணமாய்
நீள் நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்

எனப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. இப்பிரபஞ்சம் முழுவதும் சிவசக்தி மயமாகவே உள்ளது. மேற்புரமாகிய நாதம் இலிங்கமெனவும், கீழ்ப்புறமாகிய விந்து பீடமெனவும் ஆகமங்கள் கூறுகின்றன. இலிங்கத்தின் விரிவான விளக்கத்தை இலிங்கபுராணம் என்ற பகுதியிற் காணலாம். குறியைக் குறியாது குறித்தறியும் நெறியில் ஒளிர்வது இலிங்கம் எனப்படும். எல்லாப் பொருட்களும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் உரிய இடமாக இருப்பதே சிவலிங்க வடிவம் ஆகும்.

இறைவனுடைய திருவருளை நாடினால் அந்தத் திருவருளினால் மூன்று மலங்களும் நீங்கிப் பேரின்பத்தை அடையலாம். ஆணவம், கன்மம், மாயை என்ற இந்த மூன்று கோட்டைகளையும் தகர்த்தெறிந்து ஆன்மவிடுதலை பெற்று இறை இன்பத்தை நுகரவேண்டும். இறைவனே கருணையோடு வந்து அருள்புரிந்தால்தான் இது சாத்தியமாகும். இத்தகைய தெய்வத் திருவருள் நமக்கு எளிதிற் கிடைக்குமா என்று சந்தேகப்படுபவர்களுக்கு உறுதி கூறுகின்றார்.

இந்த மூன்று அகக் கோட்டைகளும் ஒரு நிலையில் இல்லை. ஓர் உருவத்தில் இல்லை. பல்வேறு உருவங்கள் எடுத்துப் பல்வேறு நிலைகளில் ஆன்மாவைச் சிறை செய்து நிற்பவை ஆகையால், திரிகின்ற முப்புரம் என்கிறார். இறைவனின் அருளை நாடும் ஆன்மாக்களினிடமான முப்புரக் கோட்டைகளைத் தகர்த்துவிட்டு விடு தலையை அவன் தருவான் என்பதை உறுதியாகக் கூறுகின்றார். இறைவன் நம் மால் அணுகமுடியாதவன் என்ற மனத் தளர்ச்சி ஏற்படக்கூடாது. மெய்யான அன்பு கொண்டுள்ள பக்தர்களுக்கு ஈசன் பொய்க்காது அருள் செய்வான்.

திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை
அரியன் என்றெண்ணி அயர்வுறவேண்டா
புரிவுடையாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவோடு நின்று பரிசறிவானே.

வேள்வி என்பது விரும்பிச்செய்யப் படுவது. யாதேனும் ஒன்றை விரும்பிச் செய்வார்களாயின் அது வேள்வி எனப் படும். அதைத் தனக்காகவும் செய்யலாம்.

**இன்றே செய்யக்கூடியதை நாளைவரை தள்ளிப்போடாதீர்கள்.**

பிறருக்காகவும் செய்யலாம்; அல்லது லௌகீகத்திற்காகவும் செய்யலாம். தக்கன் ஒரு வேள்வி செய்தான் தக்கனிடம் வேள்விசெய்ய வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. ஆனால் அவனிடம் ஆணவம் குடிபுகுந்திருந்தது. தேவர்களை எல்லாம் அடக்கி ஆளவேண்டும். அவர்கள் எல்லாம் தனக்குக்கீழ்ப்படிய வேண்டுமெனவும் விரும்பினான். அவனுடைய ஆசை பேராசையாக வளர்ந்தது. எல்லாம் வல்ல பரம்பொருளாகிய பரமேஸ்வரனே தனக்குக் கீழ்ப்படிய வேண்டுமெனவும் எண்ணம் கொண்டான். ஆணவத்திமிரிலே இருந்து தக்கன் செய்த யாகத்தைச் சிவன் வீரபத்திர வடிவம் கொண்டு தகர்த்து எறிந்தார் எனப் புராணங்கள் கூறுகின்றன. தக்கனின் தந்தையாகிய பிரமதேவனுக்கே முதல்வனாகிய சிவபெருமானை முன்னிறுத்தாமற் செய்த யாகம் சிதைவுற்றது. அகத்திலே இறையருளை நிறுத்தாமல் ஆணவத்தோடு செய்யப்படும் செயல்கள் யாவும் பயனற்றுப்போய்விடும் என்பதைப் பின்வரும் திருமந்திரப்பாடல் விளக்குகிறது.

தந்தைபிரான் வெகுண்டான் தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறைகெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினஞ் செய்த போதே

பரம்பொருளாகிய இறைவன் அண்டத்திலும் பிண்டத்திலும் வியாபித்திருக்கின்றான். இறைவன் ஊனாய் இருக்கின்றான்; உயிராய் இருக்கின்றான். ஊனையும் உயிரையும் ஒட்டி நிற்கின்ற உணர்வாயும் இருக்கின்றான். வானத்திலே ஓங்கி நிற்கின்றான். உலகத்தையெல்லாம் தாங்குகின்ற நடுத்தம்பமான மேருவாக நிற்கிறான். மேருவைச்சுற்றி வலம்வந்து உலகத்துக்கெல்லாம் ஒளி தருகின்ற சூரியனாயும் சந்திரனாயும் இருக்கிறான். இறைவன் பிண்டநிலையில் உடலோடு சேர்ந்திருக்கின்ற தொடர்பையும் அண்டநிலையிற் பிரபஞ்சம் எல்லாம் வியாபித்திருக்கும் நிலையையும் தவயோகியின் பின்வரும் திருமந்திரம் வெளிப்படுத்துகிறது.

ஊனாய் உயிராய் உணர்வங்கியாய் முன்னம்
சேணா வான் ஓங்கித் திருவுருவாய் அண்டந்
தானும் ஞாயிறும் தண்மதியும் கடந்
தான் முழு அண்டமு மாகிநின்றானே

தெய்வத் தமிழாக இருக்கின்ற திருமந்திர நூல் வெறும் ஒரு காவிய நூல் போல, வெறும் செய்யுள் இன்பத்தையும் கலை இன்பத்தையும் தருவதற்காக மட்டும் எழுந்த நூலன்று. 'உள்ளம் பெருங் கோயில், ஊன் உடம்பு ஆலயம்' என்று கொண்டிருக்கிற இறைவனை நாம் காண வேண்டுமென்ற நாட்டம் மக்களிடம் இருக்கிறது. ஆனால் வழிதான் தெரியவில்லை. கண் இருக்கிறது ஆனால் இறைவனைக் காணமுடியவில்லை. காது இருந்தும் இறைவனின் குரலைக் கேட்க முடியவில்லை. நாம் எப்படி இறைவனின் அருளைப் பெறுவோம் என்று ஏங்குகின்ற அந்தப் பெருமக்களுக்கு வழிகாட்டுவதற்காக எழுந்த நூல் திருமந்திரம். இது வெறும் உபதேசநூல் மாத்திரமன்று. அனுபவ ஞானப்பெருநூலாகவும் மிளிர்

**வாழ்க்கையில் அனைத்தும் மனிதர்களின் மனத்திலிருந்துதான் புறப்படுகின்றன.**

கிறது. ஆன்மாவிடம் இறை நாட்டத்தை ஊட்டி இறை அனுபவத்தைக் கொடுப்பது திருமந்திரம்.

உலகங்களையும் உயிர்களையும் படைப்பவன் பிரமன் என்றும், காப்பவன் திருமால் என்றும், அழிப்பவன் உருத்திரன் என்றும் தெய்வ சக்தியை மூன்றாக வகுத்துக் கூறுவார்கள். இதனால் தெய்வங்கள் பல என்ற கருத்து நம்மவர்களிடம் இருக்கிறது. மூன்று தொழில்களுக்கும் உரிய மூன்று மூர்த்திகளாகவும் இறைவன் ஒருவரே இருக்கின்றார். அந்தச் சக்தியே உடலோடு உயிரைக் கூட்டுகிறது. காப்பாற்றுகிறது. பின்பு நீக்குகிறது. இந்தத் தெய்வ சக்தியின் சிறப்பினைத்தவமுனிவர் பின்வருமாறு விளக்குகிறார்.

ஒருவனுமே உலகு ஏழும் படைத்தான்
ஒருவனுமே உலகு ஏழும் அளந்தான்
ஒருவனுமே உலகு ஏழும் கடந்தான்
ஒருவனுமே உடலோடு உயிர்த்தானே.

(தொடரும்..

## ஆசை - மனப்பக்குவம் - இறைவன்

மனிதனுடைய மனம் காலியாக இருக்கமுடியாது. ஏதாவது உணர்வுகள் அதில் நிரம்பிக்கொண்டுதான் இருக்கும்.

மனிதனாகப் பிறந்தவனுக்கு ஆசைகள் இல்லாமல் இருக்கமுடியாது. அவற்றை அடிக்கடி விலக்குவதும் சாத்தியமில்லை.

ஆனால் இந்த ஆசைகள் இரண்டுவிதம். ஒன்று - சாத்தியமாகி தீர்ந்து செலவழிந்து போகக்கூடிய ஆசைகள். இவற்றை ஒருவாறாக நாம் அனுபவித்துக் கழித்துவிடலாம். அப்போது இறைவனிடம் ஈடுபடக்கூடிய பக்குவம் வந்துவிடும். உதாரணமாக ருசியான உணவைச் சாப்பிடுவது, நல்ல உடையை அணிந்துகொள்வது போன்ற ஆசைகள் முதல்வகையைச் சேர்ந்த ஆசைகள்.

வேறுசில ஆசைகள் அதீதமானவை. அவற்றை அடையமுடியாது. அல்லது அடைவது பாவமாக இருக்கும். 'ஜனாதிபதியாகிவிட வேண்டும்!' என்று எல்லோரும் நினைக்க முடியுமா? பிறன் மனைவி அழகாக இருக்கிறாள் என்பதனால் அவளை அடைய ஆசைப்படலாமா? இரண்டாவது வகையைச் சேர்ந்த இப்படிப்பட்ட ஆசைகளை அடியோடு வெட்டி ஒதுக்குவதுதான் நல்லது.

நீர்ப்பாசனத்துக்கு ஆறு இருக்கும்போது, விவசாயி ஒரு சிறு கிணற்றை நாடிப் போவதில்லை. நமக்கு முக்தியைத் தருவதற்கு இறைவன் இருக்கும்போது, சிறு லௌகிகமான பொருட்களை நாம் நாடுவதில் பயனில்லை. அந்த ஒவ்வொரு சிறு பொருளிலும், அனுபவங்களிலும் இறைவனையே பார்க்க நாம் கற்றுக்கொள்ளும்போது மனம் பக்குவப்பட்டுவிடுகிறது. சாதமும் பிரசாதமாகிவிடுகிறது.

**கோபமூட்டப்பட்டாலும் சான்றோர்கள் சாந்தமாகவே இருப்பார்கள்.**

உ

# சங்கம வழிபாடு

இ. சாந்தகுமார் அவர்கள்

சங்கமம் என்பது அடியார் கூட்டம். சிவபெருமான் ஆலயங்களில் எழுந்தருளி இருப்பதைப்போல அடியார் உள்ளத்திலும் எழுந்தருளியிருப்பார். இறைவன் அடியார் கூட்டத்தினை விரும்பி உறைவார். அதில் தாமும் ஒருவராய் இருப்பார். இங்கு அடியார் என்பது சிவனடியாரையே குறிக்கும். சிவனடியாரைத் தொண்டர் என்றும் கூறுவர்.

''தொண்டர் தம் பெருமையை சொல்லவும் அரிதே" என்று ஔவையார் கூறியுள்ளார். தொண்டர்கள் சிவபெருமானின் திருவடியைப் பற்றுவதைவிட வேறு எவ்விதப் பற்றும் இல்லாதவர். அவர்களையே திருவள்ளுவர் நீத்தார் பெருமையில் வியந்து பாராட்டியுள்ளார்.

தொண்டர்கள் பெருமையைப் பெரியபுராணம் சிறப்பாக எடுத்துப் பேசுகிறது. பெரியபுராணம் தொண்டர்களின் பெருமையினைக் கூறுவதனால் தொண்டர் புராணம் எனவும் மாக்கதை என்றும் பெயர்பெற்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளே தாம் தொண்டர்களுக்கு அடியவர் என்றும் தொண்டர்களுக்குத் தொண்டன் என்றும் பாடியுள்ளார். இறை அடியவர்கள் உலக வாழ்க்கையை வெறுத்து இறைவன் பொற்பாதத்தினைப் பற்றிக் கொண்டார்கள். ஆதலால் திருத்தொண்டர்களின் பாதங்களை நாம் மனமகிழ்ந்து கைகுவித்து வணங்குதல் வேண்டும். அவர்களை நாம் வணங்குவதன்மூலம் இறைவனை நேரடியாகக் கண்டு வழிபட்ட உணர்வினை நாம் உணரமுடியும். அங்கு இறைவனை அன்பின் சொரூபமாகக் காணலாம்.

''சிவனடியார் கணங்களாய் வரினும் தமியராய் வரினும் அவர்களைக் கண்டதும் குணங்கொடு பணியும் குலச்சிறை" எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் குலச்சிறை நாயனாரின் சங்கமபக்தியைப் புகழ்ந்துபாடியுள்ளார். சிவனடியாரிடம் பக்தியில்லாதவர் சிவபெருமானிடம் பக்தியில்லாதவராவார். ஈசனிடத்தில் அன்பில்லாதவர் அடியவர்க்கன்பில்லார் என்பதைச் சிவஞானசித்தியார் தெளிவுபடுத்துகின்றது.

சங்கமம் எனப்படும் சிவனடியார், உறவும் பகையும் இல்லாதவர். திருவருளின்பம் ஒன்றே நிலையானதெனக்கொள்பவர். அவர்கள் சிவத்தாலும் நோன்பினாலும் செறிவிலும் அறிவிலும், அன்பிலும் அருளிலும் சிறந்துவிளங்கியவர்கள். அவர்கள் மாதேவர்க்கு ஏகாந்தராய் ஒழுகுபவர். அதனால் பழுதிலாத் துறவறத்தைப் பண்புடனும் பக்தியுடனும் பூண்டவர். சிவத்தினைப் பிரியாச் சிந்தையர் ஆண்டில் இளைஞராய் இருப்பினும் ஞானத்தால் முதிர்ந்து இருப்பவர்.

ஐந்தெழுத்து மந்திரமும் அடியார் கூட்டமும் எம்மிடத்தே மலவாதனை உண்டாகாதவாறு தடுக்கும். வீடுபேறு அடைவதற்கு அடியார் கூட்டம் சிறந்த சாதனமாகும். ஆகவேதான் மாணிக்க வாசக சுவாமிகள் இறைவனை நோக்கித் தம்மை அடியார் கூட்டத்திற்சேர்த்துவிடுமாறு அழுது அழுது வேண்டிப் பாடியுள்ளார்.

''பழவடியார் கூட்டங்காண ஆசைப்பட்டேன். அடியார் நடுவுள் இருக்

கும் அருளைப் புரியாய். நெருங்கும் அடியார்களும் நீயும் நின்று நிலாவி விளையாடும் மருங்கே சார்ந்துவர எங்கள் வாழ்வே வாவென்றருளாளே. தெருவார் கூட்டங் காட்டேயேல் செத்தே போனாய் சிரியாரோ நின்வெறி மலர்த்தாள் தொழுது செல் தொழும்பிற் கூட்டிடு"

இவ்வாறாக முக்கரண வழிபாடு நிலைத்தற்குச் சீரடியார் கூட்டம் துணை செய்யும் என்பர். "இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம் பெருமான்" என்றும் சீரடியார் பொன்னடிக்கே குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான்" என்றும் உன்னடியார் தாள் பணிவோம் ஆங்க வர்க்கே பாங்காவோம்" என்றும் பாடி அருளியுள்ளார். அடியார் திருக்கூட்டத்திற் சேர்வதற்கும் திருவருள் துணையாதல் வேண்டும். எனவேதான் "கோது மாட்டிக் குரைகழல் காட்டிக் குறிக்கொள்சென்று நின் தொண்டரிற் கூட்டாய்" என்று மாணிக் கவாசக சுவாமிகள் வேண்டிப் பாடியருளி யுள்ளார். "இதனை யுன்னியே ஏதேனும் அறியா வெறும் துரும்பனேன் ஆயினும் தொண்டரொடு கூட்டு கண்டாய்" என்று தாயுமானவ சுவாமிகள் பாடியுள்ளார்.

இத்தகைய அடியார் கூட்டம் இன்று நேற்று உண்டானதன்று. இவர்கள் பழவடியார் எனவும் பத்தாகிய தொண்டர் எனவும் திருமுறைகளிற் போற்றப்படுதலால் திருமுறைகள் எழுந்த காலத்திலும் நில வியவர்கள் கூட்டங் கூட்டமாகத் திருக் கோயில்களைத் தரிசித்துப் பாடியும் ஆடி யும் பரமனைப் போற்றிப் பணிந்து "கைத் தொண்டு காதலோடு செய்து மடங் களிலும் அம்பலங்களிலும் உறைந் தவர்கள் சிவபெருமானால் விரும்பி ஆட்கொள்ளப் பெற்றவர்கள்.

சிவனடியார் எவ்வுயிர்க்கும் அருளுடையவர் என்பதற்கு அடையாள மாக உருத்திராக்க மாலை அணிவர். ஆளடையாளத்துக்காகத் திருநீறு பூசுவர். அத்திருநீற்றின் வெண்மைபோல உள்ள மும் தூய்மையானவர்கள். முகத்தில் ஒளி யுள்ளவர்கள் பூதங்கள் நிலைகுலைந் தாலும் அடியார்கள் நிலையிற் பிறழாத வர்கள். ஓட்டின் உடைந்த துண்டினையும் உயர்ந்த செம்பொற் கட்டியினையும் ஒன் றாக நோக்கும் உள்ளத்தவர்கள். திருத் தொண்டினையே விரும்பி வேண்டுதலன்றி வீட்டின்பத்தையும் விரும்பாதவர்கள். இத் தகைய மேம்பாட்டினையுடைய தொண்டர் களின் வீரத்தை எம்மாற் சொல்ல முடி யுமோ? என்று சேக்கிழார் பாடியுள்ளார்.

அவ்வாறே தற்போது ஒரு கிலோ அரிசிக்குக்கூட ஒருநாள் முழுவதும் பல. நோ. கூ. கடையில் நிற்கும் நிலை. இந்தநிலையிலும் கூட வரும் அடியார் களை உபசரித்து. அன்புகாட்டி. உண வளித்து அனுப்பும் ஆச்சிரமத்தின் பணி யினையும் சீலம் நிறைந்த செயலையும் முருகப்பெருமானின் அருளையும் என்னென்பது.

---

எனது எந்தச் செயலும் பிரார்த்தனையின்றி நடைபெறுவது இல்லை. உடலுக்கு உணவு தேவையாய் இருப்பதைப்போன்று ஆன்மாவிற்குப் பிரார்த்தனை தேவைப்படுகிறது. கொஞ்ச நாட்களுக்கு மனிதன் உணவு இல்லாமல்கூட உயிர் வாழலாம். ஆனால், கடவுள் நம்பிக்கை கொள்ளும் மனிதன் ஒரு கணம் கூடப் பிரார்த்தனையின்றி உயிர் வாழ இயலாது.

*-காந்தியடிகள்-*

**அழியாத புகழும் செல்வமும் அறமே தரும்.**

உ

# முன்னோர் சொன்ன கதைகள்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

இந்த உலகிலே பிறந்த அனைவரும் என்றோ ஒருநாள் இறந்தேயாக வேண்டும். மரணம் எல்லோருக்கும் ஒரே வயதில் வருவதில்லை. இந்த மரணத்தின் பின் என்ன நடக்கும் என்பதுபற்றி பலரும் பலவாறு கூறினாலும் நிச்சயமாக இது தான் நடக்கும் என்பது எமக்குத் தெரியாதிருக்கிறது. மரணிக்கும்போது என்ன அனுபவம் ஏற்படுகிறது என்பதும் நாம் அறியாத ஒன்றே.

எனினும் இதுபற்றி எவரும் எதுவும் கூறவில்லை என்றும் சொல்லமுடியாது. இது குறித்து விளக்கப்பட்ட தத்துவக் கருத்துக்களைவிட, பல கதைகளும் உள்ளன.

சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரமும் பௌர்ணமியும் சேர்ந்துவரும் நாளில் சித்திரகுப்த விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. பொதுவாக காலமாகிய தந்தைக்காக அமாவாசை தினங்களிலும் இயற்கையெய்திய தாய்க்காக பூரணை நாட்களிலும் விரதமிருக்கிறோம். இவற்றுள்ளும் ஆடிமாதத்தில் வரும் அமாவாசையும் சித்திரைமாத பூரணையும் விசேடமாக விரதமனுஷ்டிக்கும் திதிகளாகும். சித்திரை மாதத்தில் பெரும்பாலும் பூரணையுடன் சித்திரை நட்சத்திரமும் வரும். வராதுபோனால் சித்திரை நட்சத்திரம் வரும் நாளிலே சித்திரகுப்த விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த நாளிலே ஆலயங்களிலே கஞ்சிகாய்ச்சி நிவேதித்து, அனைவருக்கும் வழங்குவது வழக்கம். சித்திரகுப்தரின் கதையை அன்று ஆலயங்களிலே படிப்பர். இப்போது இது அருகி வருகிறது.

ஆலயங்களிலே கந்தபுராணம், விநாயகபுராணம், திருவிளையாடற் புராணம், பெரியபுராணம் ஆகிய பல புராணபடனங்கள் நடந்த காலங்களிலே அடியார்கள் கூடியிருந்து அவற்றைக் கேட்டனர். அப்புராணங்கள் அவர்களை நல்வழிப்படுத்தின. புராணபடனம் ஒரு கலையாக அக்காலத்தில் விளங்கியது. இன்று அந்தக்கலை மறைந்து வருகிறது.

சித்திரகுப்தன் கதை படிக்கும் போது நெற்குவியலின்மேல் எழுத்தாணியை வைத்து வணங்கி வழிபடுவார்கள். இது சித்திரகுப்தன் கணக்காளராக இருப்பதைக் குறிக்கிறதாகக் கருதப்பட்டது. அவர் எங்கு கணக்காளராகக் கடமைபுரிகிறார் தெரியுமா?

மனிதனின் உயிரை அவன் இறக்கவேண்டிய நேரத்தில் யமதர்மராஜன் வந்து தன் பாசக்கயிற்றை வீசி, கட்டி, எடுத்துச் செல்கிறான். இப்படி உயிரை எடுத்துச் செல்லும் யமனை, 'தர்மராஜன்' என்றும் 'அறக்கடவுள்' என்றும் கூறுவர். அவன் எப்பொழுதுமே நீதிநெறிப்படி நியதிக்கமைய நடப்பவன் தவறு செய்யமாட்டான்.

யமன் தவறு செய்யாதிருப்பதற்கு மிக உதவியாக இருப்பவன் அவனது கணக்காளனான சித்திரகுப்தனே. இவன் ஒவ்வொருவரும் செய்யும் புண்ணியங்களையும் பாவங்களையும் எந்தத்தவறுமின்றி எழுதிவைப்பான். ஆயுளின் கணக்கையும் எழுதிவைப்பான். இந்தக்கணக்குகளை யமனிடம் ஒப்படைப்பான். இதனை

வைத்தே உயிர்கள் தம் செயல்களின் பயன்களை சுவர்க்கத்திலும் நரகத்திலும் அனுபவிக்கின்றன.

ஒவ்வொரு பாவச்செயலுக்கும் என்னென்ன தண்டனைகள் நரகத்தில் கொடுக்கப்படும் என்ற விபரம் கதையாக நீண்டுசெல்லும்போது அதைக்கேட்கும் எமக்குக் குற்றம் செய்ய மனம் ஒப்புமா?

புண்ணியம் ஒவ்வொன்றிற்கும் கிட்டும் சுவர்க்க போகங்களைக் கேட்டால் புண்ணியஞ்செய்ய மனம் அவாவி நிற்கும்.

சித்திரகுப்தன் கதை இவ்வாறு எம்மைப் பாவஞ் செய்யவிடாது தடுத்து நிற்கும். புண்ணிய கைங்கரியங்களைச் செய்ய ஊக்குவிக்கும். விரதமிருந்து பயபக்தியோடு கேட்டகதை மனதில் ஆழப்பதிந்து வழிநடத்திக்கொண்டிருக்கும் அது நினைவிலிருந்து மறையத்தொடங் கும்போது அடுத்த வருட சித்திரகுப்த விரதம் வந்துவிடும். சித்திரகுப்தன் கதை படனம் நடக்கும். அக்கதை தூசு துடைத்த படம்போல் மனதிலே தெரியும் அனைவரையும் நல்வழிநடத்தும். நம் முன்னோர் சொன்ன கதைகளின் வல்ல மையே அதுதானே.

## ஆன்றோர் வாக்கு

பெரியோர்களை எப்போதும் எழுந்து பணிவுடன் வணங்கும் இயல்புடையவனுக்கு ஆயுள், கல்வி, புகழ், பலம் ஆகிய நான்கும் அதிகரிக்கின்றன.

ஒருவனுடைய தலை நரையால் வெளுப்பதால் மட்டுமே அவன் வயது முதிர்ந்தவன் ஆவதில்லை. இளைஞனாக இருந்தாலும் எவன் நன்கு கற்றவனாக இருக்கின்றானோ, அவனையே வயது முதிர்ந்தவன் என்று தேவர்கள் கூறுகிறார்கள்.

குருவினால் தூண்டப்பட்டாலும் தூண்டப்படாவிட்டாலும், எப்பொழுதும் கல்வி கற்பதிலும், குருவிற்கு நன்மை செய்வதிலும் சீடன் முயற்சி உள்ளவனாக இருக்க வேண்டும்.

எந்தப் பிராணியையும் துன்புறுத்தாமல் - கரையான் பூச்சிகள் சிறிது சிறிதாகப் புற்றை அமைப்பதுபோல் - மறு உலகிற்கு நன்மை ஏற்படும் வகையில் சிறிது சிறிதாக தர்மத்தை சம்பாதிக்க வேண்டும்.

அழிக்கப்பட்ட (காப்பாற்றப்படாத) தர்மமே ஒருவனை அழிக்கிறது; தர்மம் காப்பாற்றப்பட்டால் அதுவும் காப்பாற்றும். எனவே தர்மம் அழிக்கப்படத்தக்கது அல்ல; அழிக்கப்பட்ட தர்மம் நன்மை அழிக்க வேண்டாம். (அத்தகைய நிலைக்கு நாம் இடம் தரக்கூடாது.)

தாயிடம் உள்ள பக்தியால் இந்த உலகமும், தந்தையிடம் காட்டும் பக்தியால் இடையில் உள்ள (மத்யம், அந்தரிக்ஷம்) உலகமும், குருவிற்கு பணிவிடை செய்வதால் பிரம்மலோகமும் அடையப்படுகின்றன.

மரணத்திற்குப் பிறகும் தொடர்ந்துவரும் தர்மம் ஒன்றுதான் சிறந்த நண்பன். மற்றவைகள் அனைத்தும் உடலுடன் அழிந்துவிடுகின்றன அல்லவா.

**அன்பற்ற தொடர்பு உறவுமாகாது நட்புமாகாது.**

உ

# ஓத உலவா ஒரு தோழன்

துணைவியூர் கேசவன் அவர்கள்

விடிகாலைப் பொழுது: பனியிற் குளித்துவரும் தென்றல் உடலை வருடிச் செல்கிறது. கோழியின் கூவலும், குருவி களின் குரல்களும் காலையின் அமை திக்கு அழகுசேர்க்கின்றன. மனம் அமைதி யில் ஆனந்தித்திருக்கும் நேரம், கன்னிப் பெண்கள் கூட்டம் நீராடலுக்காக ஆற்றை நாடிச் செல்கிறது. தூய்மையாகி, இறை வழிபாட்டிலீடுபடத் தயாராகும் அவர்கள், தம் உடலைத் தூய்மையாக்க விளை கின்றனர். உள்ளத்தையும்தான். காலைக் குளிப்பு, அதுவும் ஆற்றுக்குளிப்பு உள்ளத் திற்கும் புத்துணர்வைத் தருமல்லவா? கலகலத்து மகிழ்வாய் உரையாடிவரும் அவர்களது பேச்சு 'அவப்பேச்சாய்' அன்றி இறைசிந்தனையைச் சொல்லும் 'சிவப் பேச்சாய்' அமைகின்றது.

ஆலயமணியின் ஓசை தென்றலில் தவழ்ந்துவந்து செவியில் நுழைகின்றது. நாதசுரத்தின் 'பூபாளம்' பின்னனியாய்ச் சுருதி சேர்க்கிறது. 'தாயினும் நல்ல தலைவன்' வீற்றிருக்கும் ஆலயத்தின் கோபுரம் கம்பீரமாய்க் காட்சி தருகின்றது. ஆதிமூலத்தில் 'ஆதியும் அந்தமில்லா ஈசன்'

திருவாசகத் தேன்துளி
மலவிருளகற்றுந் திருவெம்பாவை - 6

சிவலிங்க மூர்த்தியாய் உறை வதும், தெற்குவாயிலில் 'ஞானபோத கனாம் சற்குரு' தட்சணாமூர்த்தியாய்க் காட்சி தருவதும் 'பஞ்சகிருத்திய தாரியாம் மாதேவன்' நடராஜ மூர்த்தியாய் நர்த்தனம் புரிவதும், வசந்த மண்டபத்தில் அகிலத் தின் 'அம்மை அப்பனாம் சிவலோகன்' பார்வதி பரமேசுவரனாய் எழிற்கோலங் காட்டுவதும் மனக்கண்களில் விரிகின்றன. அந்த ஆனந்த அனுபவத்தில் திளைத்த கூட்டத்தில் ஒருத்தியின் உள்ளம் ஆதிநாய கனைப் 'பாட' நினைக்கிறது. அவனுக்குப் 'புகழ்மாலையாய் "ஓர் பாமாலை" சூட்ட அவள் உள்ளமேங்குகின்றது. 'இறையழ கையே' இரசிப்பதும் 'இறைபுகழையே' கேட்பதும் 'அதனையே' பேசுவதும் அடியார் இயல்பன்றோ?

"விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய் எண் இறந்து எல்லை இலாதானாய்" விளங்கும் பிர பஞ்ச நாயகனை முற்றாய் அறிவதெங் ஙனம்? "பூமலர்மிசை வரு புனிதனாதி யோர் தாம் உணர்வது அரிய ஓர் தலைமை எய்திய" ஈசனை முற்றாய் உணர்வதெங்ஙனம்? சிவனென்றும், ஈச னென்றும், பரமேசுவரனென்றும் பல பெய ரில் அழைக்கப்படுவானின் உண்மைத் 'திருநாமம்' என்ன? அவனது ஊரென்ன? உற்றார் யாவர்? அற்றார் யாவர்? யாரைக் கேட்பது? யாரெமக்குச் சொல்லுவார்? சொல்லுவார் சொல்லினாற்றானே நாமு ணரலாம்! உணர்த்துவார் உணர்த்தினாற் றானே அவனைப் பாடலாம்! பாட விரும்பிய உள்ளம் நினைக்கிறது. நீராடிக் குளித்துவருங் கூட்டமொன்று எதிரே தெரிகின்றது அக்கூட்டத்தில் வருவார்

யாரும் எம் 'ஐயத்தைப்' போக்க வல்லராய் இருப்பரோ? அவர் 'இறைத்திறம்' உரைப்பரோ? இறைவனைப்பாட வழியமைப்பரோ? அவள் உள்ளந்தவிக்கிறது.

எதிரே வரும் அக்கூட்டத்தில் "கோயிற் பிணாப்பிள்ளைகள்" சிலர் தெரிகின்றனர். அல்லும்பகலும் ஆலயத்தில் உறைந்து இறைபணியியற்றும் பணிப்பெண்களல்லவா அவர்கள் ஒரு வேளை அவர்கள் எம்குறையைப் போக்கும் வல்லவராயுமிருப்பர். அவரையணுகியெம் ஐயந் தீர்ப்போம். ஆவல்கொண்ட உள்ளத்திற்கு ஒருவழி பிறக்கிறது.

தம்காரியம் முடியவேண்டுமென்றால், பிறரின் உதவியைப் பெறவேண்டுமென்றால், அவரைப்புகழ்தல், புகழ்ந்து மகிழ்வித்தல் மனித இயல்பன்றோ? மரபும் அதுதானே. இறைத்திறம் நாடும் உள்ளம், ஆலயப்பணிப்பெண்களைக் குற்றமற்ற குலத்தையுடையோராய் இனங்கண்டு விளிக்கிறது.

**"அரன் தன் கோயில், கோது இல் குலத்துப், பிணாப்பிள்ளைகாள்"!**

விழித்தும், ஆவல் மேலீட்டால் இறைவன் பற்றிய விளக்கத்தைநாடும் வினாக்கள் சரமாரியாகப் பிறக்கின்றன. கோயிற்பணிப்பெண்களே, "நீங்களும் நாங்களும் தினமும் வழிபடுகின்றோமே! அந்த ஈசனைப் பற்றி முழுமையாய் அறியவிழைகிறோம். **"ஏது அவன் ஊர்? ஏது அவன் பேர்? ஆர் உற்றார்? ஆர் அயலார்? ஏது அவனைப்பாடும் பரிசு?** கூறுவீர்களாக. அனுதினமும் இறைபணியியற்றும் பேறுடையீர். உமக்கு நிச்சயம் இவற்றிற்கு விடைதரமுடியும். தயைகூர்ந்து எம் ஆவலைத் தீர்ப்பீர்", என வேண்டி நின்றாள் அவள்.

அதிர்ந்தனர் பணிப்பெண்கள்; சற்றும் எதிர்பாராத் தருணத்தில் தம்மை நோக்கி ஏவப்பட்ட வினாக்கணைகளைக் கண்டு மலைத்தனர். இறைவன்மீது அன்பும் பற்றும் பக்திப்பிணைப்பும் கொண்டிருக்கும் அவர்கள் சிவன்பணியே தம்வாழ்வெனக் கருதி வாழ்பவர்கள் எனினும் இறைவனை ஆராய, அளக்க என்றும் துணிந்தாரில்லை. ஆராய்வதற்கொண்ணா 'அறிவு' அவனென்றும், அளப்பதற்கொண்ணா 'ஆழ்கடல்' அவனென்றும் அவர்கள் உணர்வர். ஆனாலும் கேள்வி பிறந்துவிட்டதே! அவர்கள் கேள்விக்கென்னவிடை? விடை சொல்லித்தானே ஆகவேண்டும். பிணாப்பிள்ளைகள் சிந்தித்தனர்.

பிரபஞ்சத்தைப் படைத்தளித்த ஈசனுக்குச் சொந்தஊர் ஏது? பிறப்பற்ற பெருமானுக்கு எந்தவூரைச் சொல்வது? உலகமே கொண்டாடித் தம் அப்பன் என்பானை எவ்வூருக்கு உரித்தாக்குவது? முன்னர், திருமாலும் பிரம்மாவும் கூட அடிமுடியறியவொண்ணா 'விசுவரூபியாய்' அனைத்து உலகங்களையும் அடைத்து நின்றானே! இவனது திருவடிகள் "திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடிகளன்றோ! பாதாள உலகங்கள் ஏழிற்கும் அப்பாலாய் வார்த்தைகட்கு அகப்படாதனவாய் இருப்பவையன்றோ! இவனது திருமுடியோ, பிரம்மா அன்னவடிவந்தாங்கி உயரஉயரப் பறந்தும், அலைந்தும் காணமுடியாமற் போனதன்றோ! மேலேயுள்ள எல்லாப்பொருட்களின் முடிபுமாயுள்ளதே இவனது திருமுடி. இத்தகைய சர்வலோக வியாபகிக்கு எந்தவூரைச் சொல்வது! இந்தக் குழப்பமே விடையாகவும் அமைந்து "யாதுமவனதுவூரே" என்பதை விளக்கி நிற்கின்றது.

**அவன் செய்த வினை அவனையே சுற்றிக்கொண்டிருக்கும்.**

"பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிபே''

அடியாரெல்லாம் தாம் விரும்பும் நாமங்களையிட்டழைக்கும் ஈஸ்வரனுக்கு உரிய நாமமேதோ? அவன் ஆணா? பெண்ணா? எப்பெயரை வைக்கலாம்? எப்படியழைக்கலாம்? எப்பெயரை வைத்தாலும் எப்படியழைத்தாலும் அங்கே அப்பெயருக்குரியவனாய் வருபவனன்றோ! "ஒரு நாமம் ஒன்றுமில்லாற்கு ஆயிரந் திருநாமம் பாடி''க் கொண்டாடுகின்றதொன்றோ இவ்வுலகு! அம்மையை இடப்பாகத்தில் தாங்கிப் "பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கும்'' அவனுக்கு ஒருருவம் யாது? ஒருருவமற்றானுக்கு ஒரு நாமம் ஏது? இறைவனது ஒருருவமல்லாப் பல்லுருவத் தன்மையே இதற்கு விடையாகி அவனது ஒரு நாமமல்லாப் பலநாமத்திறத்தையுணர்த்தி நிற்கிறது.

"பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்''

"அப்பனும் நீ, அம்மையும் நீ, அன்புடை மாமனும் மாமியும் நீ'' என உலகத்தோரெலாம் உறவுகொண்டாடும் சிவனுக்கு உற்றார் யார்? அற்றார் யார்? விருப்புவெறுப்பின் அடிப்படையில் பிறப்பதே உறவும் பகையும். ஒரேதாயின் உதரத்துதித்த சகோதரர் தம்முள் முரண்பட்டு அந்நியவராவதில்லையா? எங்கோ பிறந்தும் அன்புவயத்தால் இணைந்து நண்பராகியிருவர் உறவுகொள்வதில்லையா? ஆனால், 'வேண்டுதல் வேண்டாமையிலானுக்கு' ஏது உறவு? ஏது பகை? இறைவன் அனைத்துயிர்களையும் சமமாக மதிக்கிறான். அனைவரிடத்திலும் அன்பு செலுத்துகிறான். அவன் யாரையும் வெறுப்பதில்லை. யாருக்கும் பகை யாவதில்லை. எல்லோர்க்கும் அவன் உற்ற நண்பன். - "ஒரு தோழன்"

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவனைக் 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' அன்பினாலவனை அடையலாமேயன்றி அறிவினாலடைதல் இயலாது. 'அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவாய்த் திகழ்வானை' அறிவினாலளத்தல் எங்ஙனம்? அறிவினாலறியவொண்ணா அப்பனைப் பாடும் பரிசு ஏது? "தோள் கண்டார் தோளே கண்டார்'' என்ற நிலையிலுள்ள யாம் அவன் புகழ்பாடின் 'யானை பார்த்த குருடன் கதை''யாய் ஆகிவிடுமன்றோ? உலகத்தின் தோற்றக்காலமுதல் தேவர்களும் ஞானியரும் யோகியரும் அவனைப் பேசிப் பேசி வந்தாலும் முடிவில்லா நீட்சியாய் விரிந்துகிடப்பவனன்றோ அவன்! வேதங்களும் அவனை முழுவதாய்ப் பேசியதில்லை. எந்த ஞானமும் அவனை முழுதாய் வரையறுத்ததில்லை. பேசப்பேச விரிபவன் அவன். பாடப்பாட நயப்பவன் அவன். பாட்டில் அடக்கவொண்ணா அவன் திறத்தின் வியப்பும், இயலாமையுமே மறுமொழியாகி உலகத்தின் ஆதியும் அந்தமுமாய் இருப்பானின் 'வியாபகத்தைப்' பேசின.

"வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா'' (ஒரு தோழன்)

தைரியமே நம்முடைய மிக நெருங்கிய நண்பன்.

சர்வலோக வியாபகியாய் உலகத்து நாயகனாய்த்திகழும் 'சர்வேஸ்வரன்' அடியார்க்கோ எளியவன். அன்பால் அழை(ணை)ப்பாரை நாடிவந்து அன்புமாரி பொழிபவன் 'தீர்த்த அன்பாய அன்பர்க்கு அவரினு அன்பன'' ல்லவா அவன். உலகமெலாந் தேடியுங் காணவொண்ணா ஈசன் உறையுமோர் இடமிருக்கிறது. அதுவே அன்புவயத்தரான தொண்டரின் உள்ளம். இறைவன் தொண்டர்தம் உள்ளத்தொடுக்க மாதலினாற்றான் 'தொண்டரின் பெருமை' சொல்லுதற்கரிய தாயிற்று. தொண்டருள்ளும் அவன்தான் அவன் **"தொண்டருளன்"** ஆயினான்.

தம்மை நோக்கிவந்த வினாக்களுக்குத் தங்கள் சிந்தனைகளையே பதிலாய் முன்வைத்தனர் கோயிற்பணிப் பெண்கள். வினாத்தொடுத்த அடியாளை நோக்கி, "எம்பாவாய்", நாம் ஈசன் திறம் முழுவதாய் உரைப்பதெங்ஙனம்? அவன் கீர்த்தியை முற்றாய்ப் புகழ்வதெங்ஙனம்? நாம் எம் கருத்தைச் சொன்னோம். அதனை நீர் ஏற்பீராக; பரிசீலிப்பீராக; ஓர்ந்து துணிவீராக; "ஏல் ஓர் எம்பாவாய்" எனக் கூறி இறைபணியே தம்பணியாய்க் கொண்டோர் கோயிலை நாடிச் சென்றனர்.

இறைவனைப் பாடவிரும்பிய அடியாளின் உள்ளம் வியப்பில் விரிந்தது. விடையற்ற வினாக்களுக்குக் கிடைத்த விடைகள் அவளுக்குத் திருப்திதந்தன. விசுபரூபியான 'சிவதரிசனம்' கிடைத்த ஆனந்த அமைதி அவளை ஆட்கொண்டது. 'கேள்வியின் நாயகனான' சர்வலோகனை முன்னிட்டுத் தன்னுள் எழுந்த வினாக்களும், அவற்றிற்குப் பிணாப்பிள்ளைகளின் வாயிலிருந்து கிடைத்த விடைகளுமே ஓர் பாட்டாகி "அளவிட்டுரைக்கவொண்ணா இறைவன் பெருமையை" உணர்த்திப் பாமாலையாய் இறைவன் திருவடியில் சமர்ப்பணமாயிற்று. பாடலமைப்புக்கருதியும், 'இறைதிறத்தின்' வியப்பும் வியாபகமுமான பெருமையை வலியுறுத்தவேண்டியும் வினாவிடையாக வன்றி, விடைவினாவாக நயம் சேர்க்கிறது. இப்பாடல் வாதவூரன் திறத்தை வியக்கிறது நம்நெஞ்சு. 'தொண்டருளனாய அவனை' நம்முள்ளும் விரைந்து அழைப்போமாக!

(தொடரும்..

# வருடாந்த வைகாசிப்பெருவிழா~ 2007

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவையினரால் நடாத்தப்படும் வருடாந்த வைகாசிப்பெருவிழா எதிர்வரும் 25.05.2007 வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வழமைபோன்று நடைபெறவுள்ளது.

அன்று காலை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள் தலைமையில் விழா ஆரம்பமாகும். மேற்படி விழாவில் சமயப் பெரியார்களின் சொற்பொழிவுகளும் இடம்பெற உள்ளன.

பணம்பேசத் தொடங்கும்போது உண்மை ஊமையாகிவிடும்.

உ

# கருணை

க. சிவசங்கரநாதன் அவர்கள்

''உயர் கருணை புரியு மின்பக்கடல் மூழ்கி
உனையெனதுள் அறியும் அன்பைத் தருவாயே''

திருச்செந்தூர்த் திருப்புகழில் அருணகிரியார் கருணையின் இயல்பையும் கருணையின் பயனையும் ஒருங்கே வகுத்து விட்டார். ஒருவிதமான பிரயோசனத்தையும் எதிர்பாராத அன்புதான் கருணையாகுமாம். அந்தக் கருணையைக்கொண்டு வாழ்க்கையை நடாத்துகின்றவர்கட்கே தெய்வ பக்தியும் தெய்வ அறிவும் ஏற்படும். ஏனையவர்கட்கு இவை ஏற்படாது. கண்ணன் கீதையில் பக்தி என்னும் அன்பினாலன்றி தன்னை அறியவும் காட்சியில் காணவும் தன்னுடன் கலக்கவும் முடியாதென்று சொன்ன உண்மையை நிருபிக்கின்றார். கருணை என்பது ஒரு பண்பு. அன்பே ஒரு பண்பாக அமையப்பெற்றால் அந்த அன்பு எவ்வித காரண காரியங்களுக்கும் கட்டுப்படாமல் தன் இயல்பாகவே சேவைசெய்யும் நிலையில் நின்றுவிடலாம். நிர்வியாஜமான மனத்தின் அன்புமயமான நெகிழ்ச்சிதான் கருணை.

சுந்தரமூர்த்திநாயனார் இறைவன் மீது வைத்த பக்திகாரணமாக தன் குடும்பத்திற்காக நெல்லைக்கூட இறைவனிடம் பெற்றார். கம்பர் பாடிய இராமாயணத்தில் நாகபாச படலத்தில் கருணையின் மேன்மையை ஸ்ரீ ராமபிரான் விளக்கியதாகக் கூறுகிறார். ராவணாதிகள் நாகபாசம் என்னும் பாசத்தை விடுத்தபோது ஸ்ரீராமச் சந்திர மூர்த்தியின் பக்கத்தில் இருந்த எல்லா சைனியங்களும் அதனால் கட்டுப்பட்டு மோகத்தையடைந்து அப்படியே கீழே மடிந்தாற்போல் விழுந்து விட்டனர். கருடதேவன் பலம் ஏற்பட்டால் நாகபாசம் தெறித்துப்போம் என்பர். நாகத்திற்கும் கருடனுக்கும் ஆகாது என்பார்கள். இராவணன் ஜெயித்துவிட்டதாக ஆரவாரங்கள் ஏற்பட்டதாம். உடனே கருடபகவான் ஒரே பாய்ச்சலாய் வந்து ராம சைனியங்களை அநுக்கிரக்க நாகபாசம் அற்று அழிந்தது. ஸ்ரீ ராகவனை பல பாசுரங்களால் ப்ரம்மஸ்வருபமான தெய்வமென்றும் மாயையைக்கொண்டு உலகை ஆக்கி நிலை நிறுத்தி மறுபடியும் தன்னுள் இழுத்து ஒன்றாக்கிக்கொள்ளும் அதிரேக சக்தியுடையவரென்றும் விவரித்துத்துதித்தார். கருடன் பிறகு விடைபெற்று அகன்றான். அப்பொழுது ஸ்ரீராமன் சொல்லுவது.

''ஆரியன் அவனைநோக்கி ஆருயிர் உதவியாதும்
காரியமில்லாள் போனான் கருணையோர் கடன்மையீதால்
பேரியலாளர் செய்கை ஊதியம் பிடித்தும் என்னார்
மாரியை நோக்கிக் கைம்மாறு இயற்றுமோ வையம் என்றான்''

காருண்ய காகுஸ்தன் கருணை என்பதை விளக்குகின்றார். மழைக்குக் கைம்மாறு செய்வதில்லை உலகம் அது போல் உத்தமர்களான பெரியோர்கள் ஊதியத்தைக்கருதி ஒரு நல்ல காரியத்தை செய்யமாட்டார்கள். மழைபெய்வதுபோல்

காரணமின்றி தன் இயற்கையில் எழுந்த அன்பினால் உதவி செய்வார்களாம். மார்க்கண்டேயரை இயமன் அணுகிய போது மார்க்கண்டேயர் தன்மீது வைத்த அன்புகாரணமாக இறைவன் மார்க்கண்டேயரை இயமனிடம் இருந்து மீட்டார். பாஞ்சாலியின் சேலையினை உரிந்தபோது பாஞ்சாலி கிருஷ்ணா என நினைத்தபோது சேலை மலைபோல் வளர்ந்தமையும் பாஞ்சாலி கிருஷ்ணர்மீது வைத்த நம்பிக்கையும் அன்பும் வீண்போகவில்லை என்பது ஓர் எடுத்துக்காட்டு.

இதைப்போல் கருடபகவான் வேண்டியநேரம் ஆருயிர் உதவி செய்தானாம். பிறகு ஒரு காரியமில்லாளைப்போல் ஏகினான். இதுதான் கருணையோர்கள் தன்மை என்றனவாம். ஸ்ரீஇராமன் உலகத்தில் எல்லா ஜீவராசிகளிடத்திலும் உயர் கருணை அன்புடையவராய் அந்த அன்புக் கடலில் மூழ்கியவராய் தன்னை அருள வேண்டும் என்று வேண்டினார். அருணகிரி அன்பும் சேவையும் சேர்ந்தது கருணை. கருணையுடையவரே ஈசனைத் தன்னுள் காணும் அறிவுபெறுவார்கள் என்றும் உபதேசித்தார். திருப்புகழைப்பாட அருணகிரியார்க்கு கிடைத்த திருவருளையும் தேவாரங்களைப்பாடிய நாயன்மார்க்குக் கிடைத்த திருவருளையும் கந்தபுராணத் தைப்பாட கச்சியப்பச்சிவாச்சாரியார்க்கு திருவருளையும் யாம் சிந்தித்துப் பார்ப்பது போல் வருங்கால சமுதாயமும் சிந்தித்து பார்க்கவேண்டும். இதன்மூலம் நல்ல பலனையடையலாம்.

## அறிந்து கொள்ளுங்கள்

1. தானங்கள்:-

தானங்கள் மனமகிழ்வோடு மற்றவர்களின் வாழ்வுக்குக் கொடுக்கப் பெறுபவை. அவை கொடுப்பவரையும் கொள்பவரையும் வாழவைக்கும். அவை, பூதானம், கோதானம், அன்னதானம், வஸ்திரதானம், சம்பத்தானம், வித்தியாதானம் என்றெல்லாம் வழங்கியவை. இன்று சிரமதானம், இரத்ததானம் முதலியவையும் சேர்ந்துள்ளன.

2. தியானம்:-

மனம் இறைவனிடத்தில் இரண்டறக்கலந்துவிடும் வண்ணம் அவரை இடைவிடாது நினைப்பதற்குத் தியானம் என்று பெயர். அது அருவமாக நினைத்தல் நிர்க்குணத் தியானம் ஆகும். இறைவனின் ஏதாவது திருவுருவத்தைப் புருவமத்தி, இதயம், நாபி முதலியவற்றுள் ஏதாவது ஓரிடத்தில் நிறுத்தித் தியானித்தல் சகுணத் தியானம் ஆகும்.

3. மந்திரம்:-

மந்திரம் என்றால் நினைப்பவரைக் காப்பது என்று பொருள். மிருத்தியுஞ்ஜய மந்திரம் என்பது உயிர்ப்பூட்டும் மந்திரம் ஆகும். இது, விடம், விபத்து, நோய் முதலியவற்றைத் தடுக்கும், நீக்கும், குணமாக்கும். இதைப் பக்தியுடன் 108 முறையாவது புனிதமாக நினைத்தல் வேண்டும். இது மரணத்தினின்றும் காப்பதுமாகும்.

ஓம் த்ரயம்பகம் யஜாமஹே
சுகந்திம் புஷ்டி வர்த்தநம்
உர்வாருகமிவ பந்த நாத்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்.

-திருமதி அ. ஜெயசேகரா-

அத்திப்பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு.

உ

# ஆனந்த நிலையம்

இரா. செல்வவடிவேல் அவர்கள்

தமிழர்களின் விழுமியம் அவர்தம் குடும்பவாழ்க்கை முறையாகும். பழம் பெரும் நகைச்சுவை நடிகர் அமரர் N.S. கிருஷ்ணன் கலாச்சார நிகழ்வொன்றிற்காக ரஷ்யாநாடு சென்றிருந்தார். அங்கு பத்திரிகையாளர் ஒருவர் "உங்கள் நாட்டின் சிறப்பு என்ன?" என்று கேட்டார். எங்கள் சிறப்பு "குடும்ப வாழ்வுதான்" என்று பதிலளித்தாராம். சைவசமயத்தவரின் வழிபாட்டிற்குப் பயன்படும் உருவப் படங்களில் சிவன், சக்தி, கணபதி, முருகன் உள்ளடங்கிய குடும்பப்படம் பிரதான இடம்பிடிப்பதைக்காண முடியும். இப்படத்தை நன்கு அவதானித்தால் சிவனின் இடபமும் சக்தியின் சிம்மமும் கணபதியின் பெருச்சாளியும், முருகனின் மயிலும் கூடவே சிவன் கழுத்தில் பாம்பும் இருப்பதைக் காணலாம். இடபம், சிம்மம், பெருச்சாளி, மயில், பாம்பு ஆகிய முரண்பட்ட அனைத்தும் அமைதியாக இருப்பதைப் படம் சித்திரித்திருப்பதைக் காண முடிகின்றது. குடும்ப வாழ்விற்கு இப்படம் தரும் தத்துவவிளக்கம் உணரப்படின் குடும்பத்தில் அமைதி நிலவுவது மட்டுமல்ல! அது பல்கலைக்கழகமே ஆகிவிடும்.

பெருமைக்குரிய தமிழ் இனத்தில் இன்று "விவாகரத்து" என்பது சர்வ சாதாரணமாகிவிட்டது. இதன் காரணமாக நமது கலாசார, பண்பாட்டுச் சிறப்புக்கள் சிதறிச் சீரழியும் இழி நிலையைக் காண்கின்றோம். நாற்சாரவீடுகட்டி, நாகரிகமாக வாழ்ந்த இனமா! இன்று நீதிமன்றத்தில்....! இந்த நிலைக்குக் காரணம் என்ன?.

"திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது" எனும் கருத்து அனைத்து மதங்களினாலும் முன்மொழியப் பட்டுள்ளது. சொர்க்கத்தில் நிச்சயிக்கப் பட்டால் வாழ்வும் சொர்க்கமாக இருக்கும். முச்சந்தியில் நிச்சயிக்கப்பட்டால் நீதி மன்ற வாசலுக்குப் போகவேண்டியதுதான். நமது முன்னோர் பெரும் முயற்சிசெய்து தீர விசாரித்து திருமண ஏற்பாடு செய்வார்கள். ஆனால் இன்று நிலைமை அப்படியா உள்ளது. கண்டதே காதல் கொண்டதே கோலம் என்று தீர்மானிப்பது. பின்னர் வருந்துவதும் இயல்பாகிவிட்டது. மனப் பொருத்தமுடைய ஆணும் பெண்ணும் இணைக்கப்படுவதுதான் குடும்பங்களின் வெற்றிக்கு அத்திவாரமாக அமையும். தமிழர்கள் - சைவர்கள் ஆண்டவனை கணவன், மனைவி, பிள்ளைகள் என்று அமைத்து நமக்கு வழிகாட்டினார்கள். ஒன்றன்றி மற்றொன்றில்லை எனும் "சிவம் சக்தி" தத்துவத்தின் உட்பொருள் என்ன? இத்தத்துவத்திலுள்ள தத்துவத்தை அறிந்து கொண்டாற் போதும் குடும்பம் குதூகலமாகிவிடும்.

அன்பு, அரவணைப்பு, நிகழ்கால நிம்மதி எதிர்காலப் பாதுகாப்பிற்கான உத்தரவாதம் இவைதாம் குடும்பம் என்ற அமைப்பின்நோக்கம் ஆகும். தன்னலம், நிகழ்கால இன்பம், அடுத்த தலைமுறை பற்றிய அக்கறையின்மை இவைதான் குடும்பவாழ்வின் தோல்விக்குக் காரணமாகும். ஒருசிலருக்கு ஏற்பட்டுவிட்ட ஏமாற்றத்தால், தோல்வியால் குடும்ப அமைப்பைப் புறம்தள்ள முடியாது. இன்றும் தனி

**எல்லாம் கடவுள்செயல் என்று அறிந்தால் துன்பமுமில்லை, கவலையுமில்லை.**

மனித ஒழுக்கம், சமூக அமைப்பு, பொறுப்புள்ள வாழ்க்கை, ஆன்ம ஈடேற்றம் இவற்றில் நம்பிக்கையுடையவர்கள் நமது குடும்ப நிறுவனத்தைப் பாதுகாக்க விரும்புகின்றனர்.

கணவன், மனைவியிடம் உயர்வு தாழ்வுச்சிக்கல் தோன்றக்கூடாது. பொருத்தம் உடலிலும் வேண்டும். புரிந்தவர் துணையாக வேண்டும். என்னும் கண்ணதாசன் வரிகளை இங்கு நினைத்துப் பார்க்கலாம். கணவன், மனைவியிடம் வெற்றி தோல்வி என்ற வார்த்தைக்கு இடமளிக்கக் கூடாது. கணவனும் மனைவியும் இரண்டு சார்பு ஜீவன்கள். சண்டையில்லாத வீடு எங்காவது இருக்கின்றதா? குடும்பம் என்றால் சண்டை இருக்கும். சண்டையில்லாத வீடு குடும்பம் அன்று! அனைவரும் சிந்திக்கத் தெரிந்தவர்கள். இவர்களால் சண்டை போடாமல் இருக்க முடியுமா? இந்தச் சண்டைகள் வாசல்கடந்து போகக்கூடாது. அவ்வளவுதான்! கணவன் மனைவி சண்டை ஏன் வருகின்றது என்று சிந்தித்தால் சில காரணங்களை அறியலாம். ஒருவர் தமது அபிப்பிராயத்தை மற்றவர்மீது திணிக்க முயலுதல் சண்டைக்குப் பிரதானமான காரணமாகும். தாம்பத்திய உறவில் ஏற்படும் ஒற்றுமையின்மை அடுத்த காரணமாகும். மனோதத்துவ நிபுணர்கள் இக்காரணங்களையே குடும்பங்களின் பிரிவுக்கு முதன்மைப்படுத்திக் காட்டுகின்றார்கள்.

கணவனும் மனைவியும் நல்ல நண்பர்களாக இருப்பதுதான் குடும்பச் சண்டையைத் தடுக்கும் வழியாகும். நல்ல நடபில் வயது வித்தியாசம் திறமை மாறுபாடுகள் அறிவுவேறுபாடுகள் எதுவும் பெரியவிடயமன்று. பகிர்தல், மகிழ்தல் ஒருவருக்காக மற்றவர் எதையும் இழக்கத் துணிதல் இவையே இருக்க முடியும்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பு ஆம் கிழமை தரும் குறள்- 785

நட்பு மலர்வதற்குப் பலநாள் தேவையில்லை. உள்ளமும் உணர்ச்சியும் ஒன்றுபட்டாலே போதும். அவ் ஒத்த உரிமை நட்பென்ற உறவை வளர்த்துவிடும்.

அழிவினவை நீக்கி, ஆறு உய்த்து, அழிவின்கண்
அல்லல் உழப்பது ஆம் நட்பு குறள்- 787

தீயவழியில் சென்றால் தடுத்து நிறுத்தி நல்லவழியில் நண்பனைச் செலுத்தி துன்பங்கள் நேரும்பொழுது நண்பனுடன் சேர்ந்து தாமும் துன்பத்தை அனுபவிப்பதே தூய நட்பாகும்.

நட்பிற்கு வீற்றிருக்கை யாது? எனின் கொட்டின்றி
ஒல்லும் வாய் ஊன்றும் நிலை. குறள்- 789

நட்பிற்கு உச்சநிலை எது தெரியுமா? எப்பொழுதும் இதயம் மாறுபடாமல் இயன்ற இடத்திலெல்லாம் நண்பனைத் தளராமல் தாங்குகின்ற மன உறுதியேயாகும்.

இனையர் எவர் எமக்கு; இன்னம்யாம்! என்று
புனையினும் புல்லென்னும் நட்பு குறள்- 790

'இவர் இத்தகையர் யாம் இத்தகைய இயல்பினம் என்று ஒருவரை ஒருவர் ஒப்பிட்டுத் தம்மைப் பெருமைப்படுத்திப்பேசி விட்டாலோ நட்பு உடனே சிறுமைப்பட்டு

• நாம் கண்டு அஞ்சும் மனிதனிடம் நம்மால் அன்புசெலுத்த முடியாது.

விடும். (இக்கட்டுரையின் தேவைகருதி குறளுக்குரிய விளக்கம் தரப்பட்டுள்ளது) நட்பைப்பற்றித் திருவள்ளுவர் கூறியவை இரண்டு ஆண்களுக்கு மட்டும் உரியன வல்ல. கணவனுக்கும் மனைவிக்குமாகக் கூறப்பட்டவை என்பதறிக. மேற்குறிப்பிட்ட குறள் விளக்கத்தை அறிந்துகொண்டால் சண்டைக்கான முதற்காரணம் உருவாவ தற்கு வாய்ப்பில்லை.

தாம்பத்திய உறவில் ஏற்படும் ஒற்றுமையின்மை என்பது மிகவும் முக் கிய விடயமாகும். இளவயதுத் திரு மணங்களில் பெரும்பான்மையானவை விரி சல் காண்பதற்கு இதுவே மூலகாரண மாகும். வெறும் உடற்கவர்ச்சி (Sex) இருவரையும் வேகமாக இணைக்கின்றது. இதன்பின் நோக்கம் தோல்வி கண்டதும் வாழ்க்கை கசந்து விடுகிறது. திருவள்ளு வர் ''காமத்துப்பால்'' ஏன் பாடினார். கண்ணாலே பார்த்து காதாலே கேட்டு நாவாலே சுவைத்து, மூக்காலே மோந்து, உடம்பாலே தொட்டு உணரும் ஐம்புல இன்பங்களும் அப்பப்பா! இவை ஒருத்தி யிடம் அமைந்துள்ளனவே! இதுவும் வள்ளுவம்தான். ஒருவர் இயங்க மற்றவர் இடம் கொடுக்கப் பழக வேண்டும். சண் டையை நிறுத்தும் கசாய மருந்து இது தான்.

புராணங்களில்கூட பொருந்தாக் கல்யாணம் நடைபெற்றுள்ளது. காரைக் கால் அம்மையாரின் கதை அறிவீர்கள். காரைக்கால் பெருவணிகன் தன் மகள் புனிதவதிக்கு நாகபட்டினத்து நீதிபதியின் மகன் பரமதத்தனை மணம்பேசி முடிக்கின் றார். இந்த இடத்தைச் சேக்கிழார் குறிப்பிடு கையில் ''காளைக்கும் மயிலுக்கும் கல் யாணம் பேசினர். உற்றார் 'தாம்' மகிழ் வதற்காக என்பார். காளைக்கும் மயிலுக் கும் எப்படிப் பொருந்தும்? திருமணம் இரண்டு 'இளசு' களின் மகிழ்வுக்காக அல் லவா! நிகழும் ஆனால் இங்கு கல்யாணம் உற்றார் மகிழ்வதற்காக என்று ஏன் குறிப் பிட்டார். நடைபெறவிருப்பது பொருந்தாக் கல்யாணம் என்பதாலா! பெரியபுராணத் தைக் கற்கும்பொழுது மேற்குறிப்பிட்ட இடம் தவிர்ந்த ஏனைய இடங்களில் வதுவை, திருமணம், மணவினை எனும் சொற்களைப் பயன்படுத்தும் சேக்கிழார் இந்த இடத்தில்மட்டும் கல்யாணம் எனும் சொல்லைப் பயன்படுத்துவதை உற்று நோக்க வேண்டும்.

சோடி மான்கள் இரண்டு காட்டில் தாகத்தினால் அலைந்தன. சிறிய குட்டை யொன்றில் ஒரு மானுக்குப் போதுமான நீர்மட்டும் இருந்தது. இரு மான்களுமே தாகத்தினால் நீர்க்குட்டையில் தலையை வைத்துவிட்டன.

**ஆண்மான்:** பாவம் பெண்மான் தாகத்தில் தவிக்கிறது. நீரைக்குடிக்கட்டும் என்று நினைத்து தான் நீர் குடிப்பதுபோன்று பாவனை செய்தது.

**பெண்மான்:** பாவம் ஆண்மான் எனக்காக உணவுதேடி என்னைக் காக்கும் உற்ற துணை. தாகத்தில் தவிக்கிறது. நீரைக் குடிக்கட்டும் என்று நினைத்துத் தான் நீர் குடிப்பதுபோன்று பாவனை செய்கிறது.

ஆக ஒன்று மற்றொன்றுக்கு விட்டுக்கொடுத்து இன்பம் காண்கின்றது. மானுக்குள்ள அறிவு மனிதனுக்கு வந்து விட்டால் நிம்மதி தானே வரும்.

சுனையிற் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக் - கலை மான்தன்

**அறியாமையே துன்பங்கள் அனைத்திற்கும் காரணம்.**

கள்ளத்தில் ஊச்சும் சுரம் என்ப காதலர்
உள்ளம் படர்ந்த நெறி

(மாறன் பொறையனாரின் ஐந்திணை ஐம்பதிலிருந்து)

தமிழ்ச்சமூகத்தில் ஆணைவிடப் பெண்ணுக்குப் பல ஆலோசனைகள்-கட்டுப்பாடுகள் கூறப்பட்டிருப்பது ஆராயப்பட வேண்டும். யார் பெண்? என்ற வினாவுக்குப் பழைய நூல் ஒன்று பின்வருமாறு விடை தருகிறது.

"அன்னை தயையும் அடியாள் பணியும்மலர்ப்
பொன்னி னழகும் புவிப் பொறையும் - பின்னை
வேசி துயிலும் விறல் மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்"

குடும்பம் என்ற அமைப்பில் சில சில குறைபாடுகள் உண்டு. கொஞ்சம் அடிமைத்தனம், ஏறுக்கு மாறான துணையைச் சகிக்க வேண்டும். எதில் குறையில்லை! ஏற்படக்கூடிய குறையை நீக்கக் கூடிய பேராற்றல் பெண்ணுக்குத்தான் உண்டு. ஆண்களின் அவசரம், கோபம், வேலைப்பழு போன்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை இல்லாமற் செய்யும் மாபெரும்சக்தி - சக்தியாகிய பெண்களுக்கே உண்டு. அதற்காக, பெண்ணிடமிருக்க வேண்டிய சிறப்புத் தகுதிகளைத்தான் மேலுள்ள பாடல் கூறுகின்றது. இதனை அறியாமல் பெண்களை அடிமைப்படுத்தும் வரிகள் எனக் கூறுவது அறியாமையாகும். ஏறுக்கு மாறான துணை அமைந்தால் குடும்ப வாழ்வு நரகம்தான்.

அகில உலகத்திலும் ஆண்களைப் பிடிக்கப் பெண்களால் கண்ணிகள், பொறிகள், படுகுழிகள் ஆகியவை நிரப்பி வைக்கப்பட்டுள்ளன. - பேர்னாட்ஷா

ஒரு பெண் அழும்பொழுது அவளை நம்பிவிடாதே! ஏன் எனில் தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ள அவள் விரும்பும்பொழுது அவள் தன்னுடைய கண்ணீர்ப்பையைத் திறந்துவிடுவது அவளுடைய இயல்பு. - சோக்கிரடீஸ்.

அமைதியோடு கூடிய இல்லறமே இவ்வுலகின் இன்பசுவர்க்கமாகும். சண்டையோடு கூடிய இல்வாழ்க்கையே இவ்வுலகின் துன்ப நரகமாகும். - ரூசோ

அடிசிற் கினியாளே! அன்புடையமாதே!
பதிசொற் படிகடவாப் பாவாய் - அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழூஉம் பேதையே .போதியேல்
என் தூங்கும் என் கண் இரா"

-திருவள்ளுவர்-

ஒரு பெண் அதிகமாகக் கண்ணாடியைப் பார்க்கப்பார்க்க அவள் அதிகமாகத் தன்னுடைய இல்லத்தைப் பாழ்படுத்துகிறாள். - ஸ்பானிய முதுமொழி

அழகு ஒரு பெண்ணைப் பெருமைக்காரியாக ஆக்குகிறது. அடக்கம் அவளைத் தெய்வீகத் தன்மையுள்ளவளாக ஆக்குகிறது. - ஷேக்ஸ்பியர்.

(தொடரும்...

உண்மை ஒருவனைச் சொர்க்கத்திற்கே அழைத்துச் செல்லும்.

உ

# திண்ணமாகத் திருந்தருள் செய்மினே

ஆர்.வீ. கந்தசாமி J.P அவர்கள்

**வே**தாரணியம் என்னும் நகரில் கடற்கரையை அடுத்துள்ள பகுதியில் திருமறைக்காடு என்னும் சிவஸ்தலம் உள்ளது. அங்கு பூக்கள் மலர்ந்த அழகான புன்னை மரங்கள் மணம் பரப்பும் சோலையும், உப்பளங்களும் உண்டு. இத்தலம் கடற்கரையில் இடங்கொண்ட தாயினும் மனத்தை மிகவும் ஈர்த்துவைக்கும் இயற்கை அழகுடையது. இங்கே உள்ள திருக்கோவில் மிகவும் பழைமையும், சிறப்பும் வாய்ந்தது. மேருமலையை வில்லாகக் கொண்டு திரிபுரம் எரிசெய்த சிவபெருமான் மகிழ்ந்துறையும் இத்திருக்கோவிலின் இயற்கை அழகைப் பின்வரும் பெரிய புராணச் செய்யுள்மூலம் அறியலாம்.

"மன்றல் விரவு மலர்ப்புன்னை
மணஞ்சூழ் சோலை உப்பளத்தின்
முன்றில் தோறும் சிறுமடவார்
முத்தம் கொழிக்கும் மறைக்காட்டுக்
குன்ற வில்லி யார் மகிழ்ந்த
கோவில் புகுந்து வலங்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக்
கோவும் அரசும் திருமுன்பு"

இங்கே கோவில்கொண்ட இறைவன் வேதாரண்யேஸ்வரர் என்றும், திருமறைக்காட்டு மணாளர் என்றும் போற்றப் பெறுகின்றார். பார்வதியம்மையை யாழைப் பழித்த மொழியாள் என்று அழைப்பர். அன்னையின் குரல் சரஸ்வதியின் வீணை நாதத்தைவிட மிகவும் இனிமையாக இருந்ததால் வந்ததாக ஓர் ஐதீகம். இறைவன் அகத்திய முனிவருக்குத் தமது திருமணக் கோலத்தைக் காட்டிய திருத்தலம் இது எனப் புராணங்கள் கூறுகின்றன.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் முதலான அருளாளர்களால் திருப்பதிகங்கள் பாடப்பெற்ற புகழ்மிக்க தலமாகும். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் திருமறைக்காட்டுத் திருத்தலத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இச்சிவத்தலத்தில்தான் திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் இத்திருக்கோவிலின் திருக்கதவுகளைத் திறக்கவும் அடைக்கவும் திருப்பதிகங்களைப்பாடி அற்புதம் நிகழ்த்தினார்கள்.

முன்னர் வேதங்களாற் பூசிக்கப் பெற்றுப் பூட்டி வைக்கப்பெற்ற திருக்கதவை மீண்டும் திறக்க வைக்கத்தக்க அருளாளர் எவரும் வராததால் அங்கு வணங்க வருபவர்கள் அருகில் உள்ள ஒரு வழியே சென்று இறைவனை வழிபட்டு வந்தார்கள். இச்செய்தியை அறிந்த அப்பரும் சம்பந்தரும் திருமறைக்காட்டிற்கு யாத்திரை செய்தார்கள். இருவரும் கோவிலை வலம்வந்து வணங்கி உள்ளே சென்று இறைவன் சந்நிதிமுன் மூடப்பெற்றிருந்த கதவுகளுக்கு அருகே வந்தார்கள்.

**நன்றாக நடத்தினாலுங்கூட தீயவர்கள் தீமைகளையே செய்வர்.**

கதவுகள் திறக்கப்பெற்றுத் திரு மறைக்காட்டு மணாளனை நேராக வணங் கும் விருப்பம் கொண்ட திருஞானசம்பந்தா் தமக்கு மூத்தவரான அப்பரை நோக்கி "வேதங்களால் அர்ச்சிக்கப்பெற்று எம்பெரு மானை அடைத்து வைத்த திருக்கதவை திறக்கப்பாடியருள்வீராக'' என்றார்.

வேதங்கள் பெரும்பாலும் வட மொழியில் உள்ளன. அதைத் தேவ வடிவுகொண்டு பூசித்துப் பூட்டி வைத்த திருக்கதவைத் தென்மொழியில் பாடித் திறக்கலாம் என்ற ஆழமான உட்கருத்தும் இதிற் பொதிந்துள்ளது என்பதையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

அப்பரும் சம்பந்தரின் இவ் வேண்டுகோளை இறைவனின் திருவருட் கட்டளையாக ஏற்றுப் "பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ'' என்னும் முதல் அடியைத் தொடங்கிப் பத்துப் பாடல்களைப் பாடினார். திருக்கதவுகள் திறக்கப்படவில்லை. இதனால் மனம் வருந்திய அப்பர்பெருமான் இறைவனுக்கு என்மீது இரக்கம் இல்லையா? என்ற கவலையோடு பதிக இறுதியின் கடைக் காப்புப் பாட்டாக

"அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரே
சுரக்க இக்கதவம் திறப்பிம்மினே''

என்று பாடி வணங்கிய உடனே காப்பிடப்பட்டிருந்த இரு திருக்கதவுகளும் திறந்தன. திருமறைக்காட்டின் மெய்ப் பொருளாம் சிவமூர்த்தி நல்லருளால் திருக் கதவுகள் திறக்கப்பெற்றமையைக் கண்டு ஆனந்தங்கொண்டு அப்பரும், சிவஞானக் குழந்தையாகிய சம்பந்தரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி நேர்வாயில் வழியாக உட் சென்று பெருமான் திருமுன்பு பணிந்து போற்றித் துதித்து வணங்கித் தாம் பொழி கின்ற மாலையாகும் தேவாரப் பதிகங் களை மறைக்காட்டு மணாளருக்குச் சூட்டி அவரை நினைந்து உள்ளம் உருகிப் பிரியமனமின்றி ஒருவாறு பிரிந்து வெளியே வந்தார்கள். அவர் அங்கு பாடிய பாடலில் ஒன்று

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந் நெறிகண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

வெளியே வந்த திருநாவுக்கரசர் மலையரசன் புத்திரியாம் உமையம் மையின் திருமுலையில் கறந்த ஞானப் பாலை உண்ட சம்பந்தசுவாமிகளை நோக்கி, சிவனருளால் திறக்கப்பட்ட கத வைப் பூட்டிச்செல்வதே சிவநெறி முறை

யாகும். எனவே, அருள்நிறைந்த இக்கதவு களை அடைக்கும்படி நீரும் எம்பெரு மானைப்பாடி அருளும் என வேண்டிக் கொண்டார்.

அதைக் கேட்டருளிய சம்பந்தப் பெருமான் அப்பரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு திருக்கதவுகளை அடைக் கும்படி திருமறைக்காட்டு மணாளரை வேண்டி "சதுரம் மறை நான் துதி செய்து வணங்கும்'' என்னுந் திருப்பதிக முதற் பாட்டைப் பாடத்தொடங்கும்போதே திருக் கதவுகள் அடைத்துக் கொண்டன.

திருநாவுக்கரசர் பத்துப்பாட்டுக் களைப் பாடியபின் பதினோராம் பாட் டைப் பாடும்பொழுது திறக்கப்பட்ட கதவு கள் சம்பந்தர் முதலாவது பாட்டிலேயே பூட்டப்பட்டுவிட்டன. இதனால் அப்பர் சிறிது கவலைப்பட்டதை உணர்ந்து சம்பந்தர் அப்பரைப் பார்த்துப் பின்வரு மாறு கூறுகிறார். "அப்பர் பெருமானே தங்கள் திருப்பாடல்களைக்கேட்டு இன் புற்ற திருமறைக்காட்டு மணாளர் மேலும் மேலும் விரும்பிப் பதினொரு பாட்டைப் பாட வைத்தார். ஆனால், என்னுடைய முதற் பாட்டின் இரண்டு அடிகளிலேயே என் பாடல் சுவைக்காதபடியால் கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன என்று நகைச் சுவையாகக் கூறியதாகவும் ஒரு வரலாறு உண்டு.

வேதங்கள் இறைவனுடைய திரு வருளால் அருளாளர்களின் உள்ளங்களில் உதயமான மந்திரங்கள். இவற்றிற்கு இறைவனுடைய ஆற்றல் உண்டு. திரு முறைகளும் அத்தகையன. திருமுறைகள் எல்லாம் நமது நோய், பிணி, பாவங் களைப் போக்கிப் பரம்பொருளுடன் இணைக்கும் மகாசக்தி வாய்ந்தவை.

திருமுறைகள் திருவருட்கடலில் மூழ்கி எடுக்கப்பெற்ற நன்முத்துக்கள் மக்கள் எல்லோரும் பிறவிக்கடலைக் கடந்து இறைவன் திருவடிக் கமலங் களைச் சேர்வதற்கு நமக்குக் கிடைக்கப் பெற்ற அருட்பெரும் தோணியாகும்.

திருமுறைகள் அருளாளர்களால் நமக்கு அளிக்கப் பெற்ற அருமருந்துகள், மந்திரங்கள், இசைத்தேன்கள், சிவ அமுதங்கள். இவற்றை நாம் வாயாரப் பாடினாலும், செவியாரக் கேட்டாலும் சிந்தையிற் புகுந்து மும்மலநோய் முழு வதையும் களைந்து இம்மைக்கும் மறு மைக்கும் பேரின்பம் தரும். ஆகையினால், நாம் எல்லோரும் திருமுறைகளால் இறை வனைப் பாடிப்பணிந்து ஆன்மஈடேற்றம் பெற்று உய்வோமாக.

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்**

**காசுக்கட்டளை**
**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**
T.P.NO. 021- 2263406

**காசோலை**
**செ. மோகனதாஸ்**
**க. இல. P.7481**
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

**www. sannithiyan. org**

**தாயின் இதயம் குழந்தையின் பள்ளிக்கூடமாகும்.**

# 2006ஆம் ஆண்டு உற்சவம் (23.08.2006) தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| R.T. சம்பந்தா | மலேசியா | 10000. 00 |
| S. சிவலோகலிங்கம் | நிலாவெளி | 5000. 00 |
| ஆ. சசிகலாமூலம் மலர் ரீச்சர் | தொண்டைமானாறு | 9500. 00 |
| ஆ. சசிகலா குடும்பம் | வீரபத்திர பிள்ளையார் கோவிலடி உடுப்பிட்டி | 5000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் | | 1000. 00 |
| கந்தஞானி குடும்பம் | | 1000. 00 |
| வ. இராஜகுமார் (தும்பளை) | தெகிவளை | 5000. 00 |
| தாட்சாயினி செல்வமாணிக்கம் | உடுப்பிட்டி | 1000. 00 |
| M.B. முருகதாஸ் (கண்ணாகார்) | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| கணேசமூர்த்தி தியாகசீலன் | | 40660. 00 |
| பொ. சந்திரமோகன் ஓசன் றேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 4000. 00 |
| Dr. பாக்கியநாதன் | கல்வியங்காடு | 1000. 00 |
| திருமதி கந்தசாமி | அச்சுவேலி | 1000. 00 |
| செல்வி சரவணமுத்து | ஆவரங்கால் | 1000. 00 |
| சி. செல்வரட்ணம் | தையிட்டி காங்கேசந்துறை | 2000. 00 |
| ஜெயநிதி ரூபஜெனா | அச்சுவேலி | 3000. 00 |
| வே. தயாபதி | உடுப்பிட்டி | 1000. 00 |
| திருமதி இராசரத்தினம் பரமேஸ்வரி | மந்துவில் மேற்கு (அவுஸ்திரேலியா) | 5500. 00 |
| Dr S. சிவசம்பு | தொண்டைமானாறு | 3500. 00 |
| சுகந்தா மருத்துவமனை | ஆனைப்பந்தி (1தொகை மருந்துவகை) | 1500. 00 |
| தர்மலிங்கம் சுதாகர் | இடைக்காடு | 1000. 00 |
| தர்மசோதி தர்மருபன் தேன்சோலை | மந்திகை | 1500. 00 |
| K. கஜலிங்கம் | | 40000. 00 |
| வைரமுத்து தங்கப்பழம் | சுவிஸ் | 150 பிறாங் |
| கணேசன் குடும்பம் | சுவிஸ் | 150 பிறாங் |
| தனோத்குமார் கந்தர் | உடையார் வீதி | 1000. 00 |
| சீதலட்சுமி கந்தர் | உடையார் வீதி | 1000. 00 |
| அச்சுவேலி ப.நோ.கூ. சங்கம் | | 1மூடை அரிசி, 1புட்டி பருப்பு |
| ராஜினி குணரட்ணம் | | 1000. 00 |
| சி. சந்திரலிங்கம் பதிவாளர் | அச்சுவேலி 1/2 மூடை அரிசி | 1000. 00 |
| கைலாசபதி செல்வேந்திரா | இடைக்காடு | 3000. 00 |
| திருமதி கௌரிசுரேசன் | ஆவரங்கால் | 1000. 00 |
| ஆ. சத்தியசீலன் | துன்னாலைமேற்கு | 2000. 00 |
| ச. கற்பகம் | கரணவாய் | 5000. 00 |

**வெற்றியோ தோல்வியோ நீ நல்லமுறையில் செயலாற்று.**

உ

# அறுபத்துமூவர் குருபூசையில்.....

அன்னதாசன் அவர்கள்

ஆற்றங்கரையான், அன்னதானக் கந்தன் இவன் தன் அடியார்கள்பால் ஆடும் திருவிளையாடல்களை ஞானச்சுடர் ஆங்காங்கே பல இடங்களிற் தொட்டுக் காட்டி இவனின் தொன்மையையும் வாசகர்களிற்கு வரியிட்டு நிற்கிறது. அவ் வகையில்.....

என் ஆசிரியர் குழாமில் பலர் அழகனின் அடியவர்கள். ஒருமுறை எமது பாடசாலை நிகழ்வொன்றிற்காக அனை வரும் வந்திருந்தனர். இதில் ஓர் குடும் பத்தினர் ஆச்சிரமத்தின் அரும்பணியாம் அன்னதானப் பணியில் தாமும் ஒருபொழு தேனும் பங்கேற்க வேண்டும் என்ற பேரவா வினை எமக்கு வெளிப்படுத்தியிருந்தனர். இரு வருடங்கள் ஓடிவிட்டன. அன்று குடும்பத்தலைவர் எம்மிடம்வந்து இம்முறை வருடத்தின் முதல் வெள்ளியில் எமது நேர்த்தியை நிறைவுசெய்ய ஆசைப்படு கிறோம் ஆவன செய்யுங்கள் என்று அன்புக்கட்டளையிட்டார்கள். அடியேனும் ஆச்சிரமத்தின் சுவாமிகளிடம் கருத்தைத் தெரிவித்தபொழுது "அனைத்தும் முருகன் அருள் வியாழக்கிழமை (19.04.2007) வாக னத்தை அனுப்புகிறோம் இயன்றதைக் கொடுத்துவிடுக'' என்றருளினார். உரும் பிராயின் பலாலி றோட்டின் ஒரு புறத்தில் அவர்கள் வீடு. மறுபுறத்தில் எனது உறை யுள். ஒருபுறத்தில் இருந்து மறுபுறத்திற்கு வர பல மணிநேரம் எடுக்கும் சூழல். எரிபொருட் தட்டுப்பாடு பொருட்களின் விலையிலும் ஏற்றுக்கூலி அதிகமான நிலை. திடீரென ஓர் இடத்திலிருந்து இன்னோரிடத்திற்குச் செல்லமுடியாத நிலை. இத்யாதி.... இத்யாதி...... எமக்கு ஒரே மன நெருக்கீடு. முருகா எல்லாம் உன்னருள் என்று மறுபுறத்தில் உள்ள எமது உறையுளில் பொருட்களைச் சேர்த்துவைத்துவிட்டு ஐயாவிற்கு அறிவிப் பதாக ஏற்பாடு செய்யப்பட்டது. நாம் எதிர் பார்த்ததற்கு மாறாக வேறுஓர் மூடை அரிசியையும் மரக்கறியையும் எம்மிடம் சேர்ப்பித்தார்கள். பயிற்றங்காய், வாழைக் குலை, கத்தரிக்காய், தக்காளிப்பழம், புடோல், பலாக்காய், வெங்காயம், பச்சை மிளகாய் இதில் பெரும்பாலனவை உபய காரர்களது சொந்த உற்பத்திப் பொருட் கள். பொருட்களைப் பார்த்ததும்...... உடனே சுவாமிகளிற்கு அறிவித்து வியாழக்கிழமை 11.00 மணிக்கு வாருங் கள் எனக் காத்திருந்தேன்.

என்ன ஆச்சரியம் இருநாட்களாக உடல்நிலை சரியில்லாது இருந்த சுவாமிகள் தம் இரு அடியார்களுடன் நேரில்வந்து வாகனத்தில் பெற்றுச்சென் றார்கள். கேள்வியுற்ற குடும்பத்தினர் ஆரம் பத்திலேயே முருகனிடம் உருகினார்கள்.

நாம் இரு வாகனங்களில் செல்ல ஏற்பாடு இதில் ஒரு வாகனத்திற்குரிய ஆவணங்கள் இல்லை. அனுமதி ஆவணங் கள் கிடைத்தாலே வல்லையூடாகப் பயணிக்கமுடியும். இவர்களும் தனிப்பட்ட நேர்த்தியை முருகனிடம் வைத்துள்ளவர் கள். வியாழக்கிழமை சகல ஆவணங் களும் கிடைத்தன. அவர்களும் இணைந் தனர். 20.05.2007 வெள்ளி காலை 9.00 மணிக்கு ஐயாவிடம் வருகையைத் தெரி வித்தபின் கந்தனை வந்திக்கச் சென்று

விட்டோம். நீராடி முருகனிடம் அர்ச்சனைகள் செய்து அழுது தொழுதபின் ஆச்சிரமத்திற்கு வந்தோம். குமாரவேல் ஐயாவின் பெரியபுராணத் தொடரில் (அறுபத்தின் மூன்று நாயன்மார்) சண்டேஸ்வரரின் வரலாறு தமக்கேயுரிய பாணியில் நடைபெற்று நிறைவுற்றது. அன்னப்பூசை நடைபெற்றது. அதுவும் நிறைவுற்றது. தவத்திரு முருகேசு சுவாமிகளின் மண்டபத்தில் அறுபத்துமூவர் குருபூசை இதில் உங்கள் அடியவர்களும் கலந்து கொள்ளலாம். எனக்கோர் அருள் அழைப்புக்கிட்டியது. அதுமட்டுமல்ல இனிவருங்காலங்களில் தொடர்ந்து இப்பூசை நடைபெறும் என்ற இனியசெய்தியும் கிட்டியது. எம்முடன் வந்தவர்களிற்கு இப்பூசைபற்றி எதுவும் தெரியாது. இவர்களில் ஓர் குடும்பத் தலைவர் எம்மைப்போல் வேட்டிகட்டி வழிபாட்டில் ஈடுபடுபவரல்ல. அதற்காக அவர் நாஸ்திகரும் அல்ல. ஆழ்ந்த மனப் பக்தியுள்ளவர். வெளிக்காட்டுவதில் சற்று சங்கோஷமானவர். இதில் பங்குபற்றுபவர் மேலங்கி அணியக்கூடாது. அவரிடம் இதுபற்றிக்கூறி இது முருகனின் அழைப்பு சேட்டைக் கழட்டிவிட்டு நீங்களும் பங்கு பற்றுங்கள் என்றேன். அவரும் தம் குடும்பத்தினர் அனைவருடனும் எம்மோடு வந்த ஏனையவர்களும் அறுபத்துமூவர்களில் ஒருவர் ஆக அரிய வாய்ப்புப் பெற்றனர்.

பூசை தொடங்கி சிவபுராணம் ஓதுவோம் என்று தொடங்கிய சுவாமிகள். அடியார்களே. இங்கு அறுபத்தைந்து இலைகளில் அமுதுபரிமாறப்பட்டுள்ளன. அறுபத்துமூன்று அடியவர்களுடன் இவ்வாலய கர்த்தா கதிர்காமரும் உங்களில் ஒருவர் வடிவில் முருகனும் இருக்கிறார்கள் என்று சொன்னதும் எம்மில் பலர் ஆடிப்போய்விட்டோம்.

ஆம்! ஆற்றங்கரையில் ஆட்டிடையன் வேடத்தில் அன்று வந்த முருகன் இன்றும் இங்கேயுள்ள அடியவர் ஒருவரின் ரூபத்தில் அப்பப்போ அருளாட்சி செய்வதை முருகன்டியார்கள் முழுமனதுடன் அனுபவித்து ஏற்பவர்கள் அல்லவா.

அன்று வழமைக்கு மாறாக சுவாமிகள் சிவபுராணத்திற்குப் பதிலாக என்னையெனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்.... என்ற யோகர்சுவாமிகளின் திருப்பாடலுடன் முருகநாம பஜனையை தமக்கேயுரிய வெண்கலக்குரலில் ஓத அடியார்களும் சேர்ந்து ஓதி அமுதுண்டு ஆனந்தித்தார்கள்.

வீடுவந்து சேர்ந்தோம். அன்றிரவு செல்போனில் எமக்கு ஓர் செய்திவந்தது. இன்றும் அதனை எனது Out Boxல் சேமித்து வைத்துள்ளேன். இதோ அதனை அப்படியே தருகிறேன்.

Sir, 2day V. had a diferent type of life. 1st time had lunch with pray. V.R.OK. B coz U had made a chance 4 us to learn all this.

அதாவது ஐயா இன்று நாம் ஒரு வித்தியாசமான வாழ்வனுபவத்தைப் பெற்றோம். முதன் முறையாக வழிபாட்டுடன் கூடிய ஓர் மதிய போசனத்தை அருந்தினோம். இவற்றை நாங்கள் கற்பதற்கு நீங்கள் ஓர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்ததற்கு நாங்கள் மகிழ்கிறோம்.

ஆம் இவ்வடியவர்போல் ஆயிரம் ஆயிரம் உள்நாட்டு வெளிநாட்டு அடியவர்கள் பலர் முருகனால் ஈர்க்கப்பட்டு ஆனந்த அனுபவத்தைப் பெறவல்ல ஓர் அரிய ஊடகமாகச் சந்நிதியான் ஆச்சிரமம் அமைந்துள்ளதைப் பலரும் பலவாறு உணர்கிறார்கள். இங்கு நடைபெறுவது

வெறும் அன்னதானம் அல்ல. இதற்கும் ஏனைய ஆலயங்களில் நடைபெறும் அன்னதானங்களிற்கும் பாரிய இருவேறு பாடுகள் உண்டு.

1. இது முருகனின் திருவருளை அன்பாலுணர்ந்து அதன் ஆனந்த அனுபவத்தைப் பெறும் ஓர் அருளீர்ப்புப் பொழுது.

2. இது முருகனின் திருமருந்து. கத்தரிக்காய் கிரந்தி, வாழைக்காய் வாய்வு என்று கழிக்கும் கறிகளுமல்ல இவை. இதில் எவற்றை நீ கழிக்கிறாயோ வாழ்நாள் முழுக்க கழித்துக்கொண்டே இருப்பாய். சந்நிதியானது மருந்தென்று உண்ணுங்கள் முருகன் உங்களை வருந்தாது காப்பான் என்ற பேரருள் உண்மையை விளக்கும் ஓர் அரிய திருவருட்பிரசாதமாகும். இதில் பங்குபற்ற ஆவல்கொண்டு அலைகின்ற அடியவர்களை நாமறிவோம். வாய்ப்புள்ளவர்களுக்கு வாய்க்கும்.

எம்முடன் வந்த அதில் பங்கேற்ற அனைத்து அடியார்களும் ஓர் ஆனந்த அனுபவத்துடன் ஓர் மன நிறைவினையும் பெற்றுக்கொண்டதை அவர்களது உரை யாடலில் இருந்து புரிந்தது. அதுமட்டு மல்ல முருகனருள் கிட்டினால் வருடா வருடம் தொடர்ந்து வருடப்பிறப்பின் வரும் முதல் வெள்ளிக்கிழமையைத் தங்கட்கு இதுபோன்ற ஒரு வாய்ப்பினைத் தந்து உதவுமாறு சுவாமிகளிடம் அன்பு வேண்டு கோள் இட்டுச் சங்கற்பித்துமுள்ளார்கள். யாவும் முருகனருள் அவனின்றி நாமேது.

---

*(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி.....*

| | | |
|---|---|---|
| ப. பத்மகாந்தன் ஆசிரியர் | பருத்தித்துறை | 1000. 00 |
| கா. நடராசா | கரணவாய் மத்தி | 1500. 00 |
| கி. நல்லம்மா | இடைக்காடு | 2000. 00 |
| கனகசபேசன் குடும்பம் | கனடா | 40000. 00 |
| ரஞ்சிதாதேவி பாலச்சந்திரன் | ஜேர்மனி | 32638. 00 |
| சின்னத்துரை வினோதன் | கைதடிமேற்கு | 5000. 00 |
| உதயகுமார் கீர்த்தனி இரும்புமதவடி | வதிரி | 5000. 00 |
| பாலேந்திரா அரவிந்தன் | கொழும்பு | 5000. 00 |
| சுரேந்திரன் | சிறுப்பிட்டி | 2000. 00 |
| சிவபாலன் செந்தூரன் | கதிரிப்பாய் | 3000. 00 |
| க. குமாரதாஸன் | இணுவில் | 1000. 00 |
| செல்வி ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| கா. பத்மநாதன் | இமையாணன் | 1500. 00 |
| சி. சிவகாசன் சித்தம்பாதி | கரணவாய் | 5000. 00 |
| இ. ரதிதேவி | காரைநகர் | 1000. 00 |
| தயாபரன் | இடைக்காடு | 500. 00 |

*(தொடரும்....*

சிரிப்பும் அழுகையும் வாழ்க்கையின் தோழர்கள்.

உ

# சந்நிதியான்

திரு. ந. அரியரத்தினம் அவர்கள்



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆலம் இலைகளில் அமுது படைத்து வழிபாடு செலுத்துகின்ற நிகழ்வு இவ் ஆலயத்தின் ஆதிமூலமான செயற்பாடாக இருந்து வருகின்றது. அதுமட்டுமன்றி இந்த செயற்பாட்டை ஆலயத்தின் பூசகர்கள் அதேவிதமான முக்கியத்துவத்துடன் இன்றுவரை மேற்கொண்டுவருவதனையும் நாம் காணமுடியும். கதிர்காமக் கந்தனுக்கும் இதேபோன்று தனித்துவமான முறையில் பக்குவமாகத் தயார்ப்படுத்தப்பட்ட நைவேத்தியத்தை பிரதம கப்புறாளை காவுதண்டில் தானே காவிச்சென்று மூலஸ்தானத்தில் கந்தப்பெருமானுக்கு நிவேதனம் செய்வதையும் நாம் காண்கின்றோம்.

பொதுவாக ஆகமவிதிக்குட்பட்ட ஆலயங்களைப் போலல்லாமல் வித்தியாசமான அமைவிடத்திலேயே ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் மடப்பள்ளி அமைந்திருப்பதை அடியார்கள் அவதானிக்க முடியும். இதனை சந்நிதி ஆலயத்திற்கென்றே விஷேடமாக அமைக்கப்பட்ட அல்லது அமைந்திருக்கின்ற ஒரு மடப்பள்ளியாக நாம் கருதவேண்டியுள்ளது. பொதுவாக சந்நிதியில் வழங்கப்படுகின்ற பிரசாதங்கள் அனைத்தையும் அடியார்கள் மருந்தாக நினைத்து அவற்றை ஆலயத்திலும் மடப்பள்ளியிலும் பெற்றுச்செல்வது வழக்கம். இதனால் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் பூசகர்கள் பெருமளவு அமுதினை மடப்பள்ளியில் தயாரித்து அடியார்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்து வருகின்றனர். இவ்வாறு பெரியளவில் தேவைப்படும் அமுதினைத் தயாரிப்பது, மற்றும் ஆலயத்தால் அடிக்கடி அன்னதானம் வழங்கப்படும்பொழுது மேற்கொள்ளப்படும் சமையற் செயற்பாடுகள் எல்லாம் மேற்படி மடப்பள்ளியிலேயே இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் பொதுவாக அன்றாடம் அடியார்கள் காணுகின்ற செயற்பாடுகளாகும்.

ஆனால் இதுவரை இங்கே நாம் குறிப்பிட்ட இந்த மடப்பள்ளியைவிடவும் இன்னொரு தனித்துவமான, புனிதமான ஒரு மடப்பள்ளியும் சந்நிதியில் காணப்படுகின்றது. இது மடப்பள்ளிக்குள் இன்னொரு மடப்பள்ளியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மூலஸ்தான முருகனுக்கு ஒவ்வொரு பூசையின் பொழுதும் படைக்கப்படும் நைவேத்தியம் இங்கேதான் தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறு விஷேடமாக வடிவமைக்கப்பட்ட இந்த மடப்பள்ளிக்குள் பூசகர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களைத் தவிர வேறு யாரும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. அத்துடன் மூலஸ்தானத்

**பலவீனனுக்கு சீக்கிரம் கோபம் வரும்.**

திற்குச் சென்று பூசை செய்கின்ற அல்லது தீபம் காட்டுகின்ற தகுதியில் உள்ளவர்களாலேயே சந்நிதியானுக்குப் படைக்கப்படும் நைவேத்தியம் . தயாரிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மேலும் மூலஸ்தானத்தில் பூசைக்குரிய எல்லா முன் ஆயத்தங்களும் செய்யப்பட்டபின் இறுதியாக பிரதம பூசகர்களால், சந்நிதியானுக்கு படைப்பதற்குத் தயார்செய்யப்பட்ட அமுதினை ஆலம் இலைகளில் ஆவி பறக்கின்ற நிலையில் மூலஸ்தானத்தில் பிரதம பூசகர்கள் படைத்தவுடன் அங்கே பூசையும் உடனடியாகவே ஆரம்பித்து விடுகின்ற நடைமுறையும் இங்கே பின்பற்றப்பட்டு வருகின்றது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்துக்குச் செல்கின்ற ஒரு அடியவர் அங்கே ஆலயத்தின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள மடப்பள்ளியின் பிரதான வாசலால் உள்ளே சென்றவுடன் தனது வலதுபக்கமாக உற்றுநோக்குவதன் மூலம் இங்கே நாம் குறிப்பிடுகின்ற இந்த தனித்துவமானதும் புனிதமானதுமான அந்த மடப்பள்ளியை இனங்காண முடியும். புனிதமான இந்த சிறிய .மடப்பள்ளிக்குள்தான் மிகவும் புனிதமான •முறையில் சந்நிதி முருகனுக்கு நைவேத்தியம் தயாரிக்கப்படுகின்றது.- மிகவும் தனித்துவமான நைவேத்தியம் தயாரிக்கப்படுவதென்றால் என்ன என்பதையும் இங்கே வெளிப்படுத்துவது பொருத்தமானது.

இங்கே உடல் தூய்மை, உளத் தூய்மை பயன்படுத்தப்படும் பொருட்களின் தன்மை அவற்றின் சுத்தம் என்பன எல்லாம் மிகவும் கவனமாக நோக்கப்பட்டே அந்த விஷேடமான மடப்பள்ளிக்குள் சந்நிதியானுக்கு நைவேத்தியம் தயாரிக்கப்படுகின்றது. கண்ணப்பநாயனார் காளத்தியப்பருக்கு எவ்வாறான மனப் பக்குவத்துடன் மான் இறைச்சியைப் படைத்தாரோ அவ்வாறான மனப்பக்குவத்துடனேயே இங்கேயும் பூசகர்கள் சந்நிதியானுக்கு நைவேத்தியத்தைப் பக்குவப்படுத்தி படைத்து வருகின்றனர். மருதர் கதிர்காமரிடம் சந்நிதி முருகன் தனக்குப் பசிக்கிறது ஆலம் இலையில் அமுது படைக்குமாறு கேட்டபொழுது மருதர் கதிர்காமர் தனக்கு அந்தப் பக்குவம் இல்லை என்று தயக்கம் காட்டினார்கள். ஆனாலும் சந்நிதியானின் பசியைப் போக்குவதற்கான அமுது என்ற நிலையில் உடலாலும் உள்ளத்தாலும் மிகவும் உயர்நிலைக்குத் தன்னைப் பக்குவப்படுத்தி மருதர் கதிர்காமர் நைவேத்தியத்தைப் படைத்தது போல இன்றும் சந்நிதியில் பூசகர்கள் அதனை அப்படியே தொடர்ந்து கடைப்பிடித்து வருவதை இங்கே நாம் வெளிப்படுத்துவது பொருத்தமானது. மேலும் இந்த புனிதமான மடப்பள்ளியில் பயன்படுத்தப்படும் பொருட்கள் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும். உதாரணமாக காலைப்பூசைக்கு வடை சுடுவதற்குப் பயன்படுத்திய எண்ணெயை மீண்டும் மதிய பூசைக்கோ, மாலைப்பூசைக்கோ பயன்படுத்தப்படுவதில்லை.

இவ்வளவு புனிதம் நிறைந்த சந்நிதியானது விசேட மடப்பள்ளியை எவ்வாறு பேணவேண்டும் என்பதை நன்கு தெரிந்து வைத்துள்ள தொண்டைமானாற்றைச்சேர்ந்த அடியார் ஒருவரது கண்ணெதிரே இதுபற்றி எதுவுமே தெரியாத ஒரு சாதாரண சந்நிதியானது அடியார் அந்த மடப்பள்ளியில் தவறுதலாக நடந்துகொண்டது தொடர்பாக ஏற்பட்ட ஒரு அற்புத நிகழ்வினையும் இங்கே வெளிப்படுத்துகின்றோம்.

வாழ்க்கைக்கு பயிற்சிபெறுவதுதான் கல்வி.

தற்போது ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் வயதிலும் அனுபவத்திலும் மூத்த பூசகராக விளங்குபவர் ஆறுமுக சாமி ஐயர் அவர்களாவார். இவருக்கு தற்பொழுது வயது 70. இவரை சின்ன ஆறுமுகசாமி ஐயர் என்றே எல்லோரும் அழைப்பது வழக்கம். இவர் பிரதம பூசக ராக வருவதற்கு முன்பு நீண்டகாலமாக அந்த புனித மடப்பள்ளியில் நைவேத் தியம் தயாரிக்கின்ற செயற்பாடுகளில் அடிக்கடி ஈடுபடுவதுண்டு. 1970ஆம் ஆண் டளவில் வருடாந்த உற்சவத்தின்பொழுது ஒருநாள் காலைப்பூசைக்காக ஆறுமுக சாமி ஐயர் அந்த மடப்பள்ளிக்குள் அமு தினை தயார்செய்துகொண்டிருக்கும் பொழுது வெளியில் ஏதோ சத்தம் கேட்பதுபோல் இருந்தது.

அவர் மடப்பள்ளிக்கு வெளியில் எட்டிப்பார்த்த பொழுது தொண்டைமானாற் றைச் சேர்ந்த திரு சின்னக்கண்டு அவர் கள் (தொண்டைமானாற்று சந்தியில் இருந்து தற்போது உடுப்பிட்டி சந்திக்கு அருகாமையில் நாதன் தனியார் வைத்திய நிலையத்தை நடாத்திவரும் வைத்தியர் சிவசம்பு அவர்களின் மாமனார்) ஒரு அடியவரை மிகவும் கடின மான தொனியில் அதட்டிக் கொண்டிருந் தார்கள். என்ன விடயம் என ஆறுமுகசாமி ஐயர் அவரிடம் கேட்டபொழுது அங்கே நின்ற அந்த அடியவர் மடப்பள்ளிக்குள் இருந்த பைப்பில் தண்ணீர் எடுத்து கால் களைக் கழுவியதுடன் வாய் கொப் பளித்த நீரை அங்கேயிருந்த வாய்க்காலுக் குள் கொப்பளித்ததையும் கோபத்துடன் எடுத்துக்கூறினார்கள். இவ்வாறு ஆறுமுக சாமி ஐயருக்கு திரு சின்னக்கண்டு அவர் கள் எடுத்துக் கூறி எவ்வளவு புனிதமான இந்த இடத்தினை இந்த நபர் களங்கப் படுத்தியதை எப்படிப் பொறுத்துக் கொள்வது எனக்கூறி மீண்டும் அந்த நபரை அதட்டி அடிப்பது போலவும் நெருங்கிச் சென்றார்கள். ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் அதனைப் பெரிதுபடுத்த அனுமதிக்காது சரி நடந்து முடிந்து விட்டது என சமாதானம் கூறி அவர்களை அனுப்பிவிட்டு மடப்பள்ளிக்குள் சென்று மீண்டும் நைவேத்தியம் தயாரிக்கின்ற அந்த செயற்பாட்டில் ஈடுபடலானார்கள்.

மறுநாள் ஆறுமுகசாமி ஐயர் அதேவிதமாக அங்கே காலையில் அமுது தயாரிக்கின்ற செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபொழுது திரு சின்னக்கண்டு அவர்கள் மிகவும் சஞ்சலத்துடன் அங்கே வருகை தந்தார்கள். ஆறுமுகசாமி ஐயரி டம் நடந்த சம்பவத்தை கலக்கத்துடன் எடுத்துக்கூறினார்கள்.

ஆம்! முதன்நாள் இரவு தாம் நித்திரையில் இருக்கும்பொழுது ஒரு சிறுவன் வந்து தன்னைத் தட்டி எழுப்பி "நீ கோயிலுக்கு வந்தால் அங்கே உன்னுடைய வேலையை மட்டும் பார்க்க வேண்டும் அங்கே நடப்ப வற்றை எல்லாம் நான் பார்த்துக் கொள்வேன்" என்று கூறியதாகவும் தான் பதைபதைப்புடன் கண்களை விழித்துப் பார்த்தபொழுது அங்கு யாரையும் காண முடியவில்லை என்றும் உடல் புல்லரிக்க எடுத்துக் கூறினார்கள். உடனடியாகவே இது சந்நிதியானுடைய திருவிளையாடல் என்பதை உணர்ந்து கொண்டு பிராயச் சித்தமாக இன்றைய காலைப்பூசைக்கு அவனிடம் ஓடிவந்துள்ளேன் என்று திரு சின்னக்கண்டு அவர்கள் கண்ணீர்மல்க எடுத்துக்கூறினார்கள்.

ஆலயத்திற்கு வழிபட வந்த ஒருவர் தெரியாமல் செய்த தவறுக்காக தான் அவசரப்பட்டு தண்டனை கொடுக்க

**உடல் உள்ளவரைக்கும் கடல் கொள்ளாத கவலை.**

முயற்சித்தது உண்மையில் ஒரு பிழை யான விடயம் என்று இப்பொழுது உணர்ந் துள்ளதாகவும் ஆறுமுகசாமி ஐயரிடம் உள்ளம்உருக எடுத்துக்கூறினார்கள். ஆறு முகசாமி ஐயரும் அவருக்கு ஆறுதல் கூறிய அதேநேரம் இந்த அனுபவத்தைத் தான் நாம் சந்நிதியானிடமிருந்து முதலில் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற உண்மை யையும் திரு சின்னக்கண்டு அவர் களுக்கு எடுத்துக்கூறி அவரை அன்புடன் அனுப்பிவைத்தார்கள்.

நாம் எல்லோரும் சந்நிதியானது அடியவர்கள் வழிபடச்சென்றால் அமைதி யாக வழிபடுவது. தானம் வழங்கச் சென் றால் அடக்கமாக அதனை வழங்குவது, தொண்டுசெய்யச்சென்றால் தூய்மையாக அதனை நிறைவேற்றுவது இவ்வாறுதான் எமது செயற்பாடுகள் சந்நிதியிலே நிகழ வேண்டும். பக்குவப்பட்டவர்கள் இத னையே சந்நிதியில் கடைப்பிடித்து வரு கின்றனர். இவற்றினைமீறி ஒருவர் நடக்க முற்படும்பொழுது என்ன நடக்கும் என் பதை அடியார்களுக்கு வெளிப்படுத்தவே மேற்படி ஒரு சிறிய சம்பவத்தை நாம் ஓர் உதாரணமாக இங்கே வெளிப்படுத்தி உள்ளோம்.

உண்மையில் ஆலயத்திற்கு வழிபடவந்த அடியவர் நடந்துகொண்ட முறை தவறானதாக இருக்கலாம். ஆனால் அந்தத் தவறினை அவருக்கு எப்படிச் சுட்டிக்காட்டுவது அல்லது அவரை எப்படித் திருத்துவது என்பது அந்த அடியவருக்கும் சந்நிதியானுக்கு முள்ள ஒரு விடயம். அதனை சந்நிதி யானே பார்த்துக்கொள்வான். இதுதான் இங்கே உள்ள யதார்த்தம்.

கலியுகக் கடவுள் முருகன் என் பதை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் மிகவும் துல்லியமாக சந்நிதியான் வெளிப் படுத்திக்கொண்டிருக்கின்றான். இதை அனு பவத்தால் உணர்ந்ததனால்தானே தினம் தினம் ஆயிரக்கணக்கான அடியார்கள் அங்கே அலைஅலையாகத் திரண்ட வண் ணம் உள்ளனர். தன்னை நாடி வந்த அடியவன் தெரியாமல் தவறு செய் தாலும் அவனுக்காக அன்றே செயற் பட்ட சந்நிதியான் உங்கள் உண்மை யான வழிபாட்டிற்கும் உடனடியாகவே கருணைமழை பொழிவான். அதில் சந்தேகமில்லை. வாருங்கள் வந்து அவன் அருள் பெற்று ஏகுங்கள்.

ஓம் முருகா!

---

## கலி தீர்ப்பான் கலியுகக் கந்தன்

(கட்டளைக் கலிப்பா)

தொல்லை துடைக்கும் கரமே ஈராறும்
தொல்லை இரிக்கும் நயன அருளும்
வல்ல வடிவுடை வேலனின் பாதம்
வணங்கின் வரு வினையது போக்கிடும்
எல்லை யிலா அன்னமுது ஈந்தருள்
எண்ணி வடி வேலனடி வேண்டினால்
ஒல்லை தனிலே தொல்லையும் தீர்த்திங்கே
ஓடும் மிடி சந்நிதி வேலனாலே!

*கவிஞர்: பொன். சுகந்தன்*

**பக்தி என்பது இறைவனிடம் செலுத்தும் மேலான அன்பாகும்.**

உ

# வைகாசிமாத வாராந்த நிகழ்வுகள்

*04-05-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**சொற்பொழிவு:-** மானம் தடுத்தது மனம் துடித்தது

**வழங்குபவர்:-** இரா. கேதீசன்

---

*11-05-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**விடயம்:-** பக்திப்பாடல்

**வழங்குபவர்கள்:-** க. சத்தியதாஸ் குழுவினர்

*(வில்லிசைக் கலைஞர்)*

---

*18-05-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

**சொற்பொழிவு:-** பசித்தோர் முகம்பார்

**வழங்குபவர்:-** சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்

---

*25-05-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

## வைகாசிப் பெருவிழா

## ஞானச்சுடர் மலர் வெளியீடு

பதிவு இல. Q.D/44/NEWS/2007

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2007

**ஜனவரி**
01.01.2007 மார்கழி 17 திங்கள்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
02.01.2007 மார்கழி 19 புதன்
திருவாதிரை விஷேட உற்சவம்
15.01.2007 தை 1 திங்கள்
தைப்பொங்கல்
27.01.2007 தை 13 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**பெப்ரவரி**
01.02.2007 தை 18 வியாழன்
தைப்பூசம் விசேட உற்சவம்
16.02.2007 மாசி 4 வெள்ளி
மகாசிவராத்திரி விசேட உற்சவம்
23.02.2007 மாசி 11 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மார்ச்**
05.03.2007 மாசி 19 சனி
மாசிமகம்
21.03.2007 பங்குனி 7 புதன்
ஆலய கும்பாபிஷேகதினம்
சகஸ்ரமகா சங்காபிஷேகம்
சண்முக அர்ச்சனை, விசேட உற்சவம்
23.03.2007 பங்குனி 9 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**ஏப்ரல்**
01.04.2007 பங்குனி 18 ஞாயிறு
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமான் கும்பாபிஷேகதினம்
14.04.2007 சித்திரை 1 சனி
மங்கள இந்துப் புதுவருடப் பிறப்பு
(சர்வமித்ரு) மாலை விசேட உற்சவம்
19.04.2007 சித்திரை 8 வியாழன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மே**
02.05.2007 சித்திரை 19 புதன்
சித்திரா பூரணை விரதம்
12.05.2007 சித்திரை 29 சனி
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
காலை 10 மணி சங்காபிஷேகம்
காலை 11 மணி சண்முகார்ச்சனை
மதியம் 12 மணி விசேட உற்சவம்
15.05.2007 வைகாசி 2 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.05.2007 வைகாசி 18 புதன்
வைகாசி விசாகம் விசேட உற்சவம்

**ஜூன்**
13.06.2007 வைகாசி 30 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.06.2007 ஆனி 5 வெள்ளி
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
25.06.2007 ஆனி 11 திங்கள்
தீர்த்தமெடுப்பு

**ஜூலை**
02.07.2007 ஆனி 18 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
10.07.2007 ஆனி 26 செவ்வாய்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
15.07.2007 ஆனி 31 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூசை

**ஆகஸ்ட்**
06.08.2007 ஆடி 21 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
12.08.2007 ஆடி 27 ஞாயிறு
ஆடிஅமாவாசை விரதம்
13.08.2007 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
கொடியேற்றம் அதிகாலை 5.30
16.08.2007 ஆடி 31 வியாழன்
காலைத்திருவிழா ஆரம்பம்
21.08.2007 ஆவணி 4 செவ்வாய்
பூங்காவனம்
22.08.2007 ஆவணி 5 புதன்
கைலாய வாகனம்
26.08.2007 ஆவணி 9 ஞாயிறு
சப்பறம்
27.08.2007 ஆவணி 10 திங்கள்
காலை தேர்
28.08.2007 ஆவணி 11 செவ்வாய்
காலை தீர்த்தம்
மாலை மௌனத் திருவிழா

**செப்ரெம்பர்**
03.09.2007 ஆவணி 17 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.09.2007 புரட்டாதி 13 ஞாயிறு
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**அக்டோபர்**
11.10.2007 புரட்டாதி 24 வியாழன்
நவராத்திரி விரதாரம்பம்
20.10.2007 ஐப்பசி 3 சனி
சரஸ்வதி பூஜை
21.10.2007 ஐப்பசி 4 ஞாயிறு
விஜயதசமி
கேதாரகௌரி விரதாரம்பம்
27.10.2007 ஐப்பசி 10 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**நவம்பர்**
06.11.2007 ஐப்பசி 22 வியாழன்
தீபாவளி
09.11.2007 ஐப்பசி 23 வெள்ளி
கேதாரகௌரி விரதம்
10.11.2007 ஐப்பசி 24 சனி
கந்தசஷ்டி விரதாரம்பம்
15.11.2007 ஐப்பசி 29 வியாழன்
கந்தசஷ்டி சூரன்போர்
16.11.2007 ஐப்பசி 30 வெள்ளி பாரணை
தெய்வானை அம்மன் திருக்கல்யாணம்
24.11.2007 கார்த்திகை 8 சனி
திருக்கார்த்திகை விரதம்
விசேட உற்சவம் குமாராலய தீபம்
25.11.2007 கார்த்திகை 9 ஞாயிறு
விநாயக விரதாரம்பம்
விஷ்ணு ஆலய தீபம்

**டிசம்பர்**
15.12.2007 கார்த்திகை 29 சனி
விநாயகர் சஷ்டி விரதம்
திருவெம்பாவை பூஜாரம்பம்
16.12.2007 கார்த்திகை 30 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை
21.12.2007 மார்கழி 5 வெள்ளி
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
24.12.2007 மார்கழி 8 திங்கள்
திருவாதிரை விசேட உற்சவம்

சுபமங்களம்
நன்றி